Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 049 | வியாழக்கிழமை | தை 01 ஆம் நாள் 14 ஜனவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 32 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

வாசகர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் உதயனின் தமிழர் திருநாளாம்

**தைத்திருநாள் வாழ்த்துக்கள்.**



# தமிழர் அபிலாஷையை அரசு புறந்தள்ள முடியாது

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு



கொழும்பு, ஜனவரி. 14

தமிழர்களும் இலங்கைத் திருநாட்டின் பிள்ளைகள். எம் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றாமல் எம்மக்களைப் புறந்தள்ளிவைத்து எந்தக் கருமத்தையும் ஆட்சியாளர்கள் முன்னெடுக்க முடியாது. தமிழரின் எதிர்பார்ப்பாக முன்வைக்கப்படவுள்ள புதிய அரசமைப்பானது நிரந்தரத் தீர்வைக்காண வழிகாட்ட வேண்டும்' 31

# ரஞ்சனுக்கு பதில் அஜித்

கொழும்பு, ஜன. 14

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பதிலாக அஜித் மானப்பெரும நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படவுள்ளார். நீதிமன்ற அவமதிப்பு 31

பேராசிரியர் சண்முகதாஸ்க்கு

## உலகத் தமிழ்ச்சங்க இலக்கண விருது!!



யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் பெருந்தலைவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியருமாகிய பேராசிரியர் அ.சண்முகதாஸ்க்கு 31

## அரசியல் கைதிகளை விடுவிக்குக யாழில் கருத்தோவியப் பேரணி!

யாழ்ப்பாணம், ஜன. 14

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும் என்று வலியுறுத்தி கருத்தோவியக் கண்டனப் பேரணி யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் நேற்று இடம்பெற்றது. 31

## யாழ். மாநகர எல்லைக்குள் புதிதாக நினைவேந்தல் தூபி

*மாநகர சபையில் தீர்மானம்*

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் புதிதாக முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அமைப்பது உட்பட மூன்று தீர்மானங்கள் யாழ்ப்பாணம் மாநகர சபையில் நிறை 31

## அரசியல் கைதிகளுக்காக போராட்டத்தில் பங்கெடுத்த பெரும்பான்மை இனத்தவர்!



யாழ்ப்பாணம், ஜன. 14

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி யாழ்ப்பாணம் பேருந்து நிலை 31

## பரராஜசிங்கம் கொலை: பிள்ளையான் விடுதலை



யாழ்ப்பாணம், ஜன. 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பான வழக்கில் இருந்து நாடாளுமன்ற 31

## கொரோனா 50,000!

கொழும்பு, ஜன. 14

இலங்கையில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்தைத் தாண்டியது. 30

## வவுனியாவில் மேலும் 18பேருக்கு நேற்று தொற்று

வவுனியா, ஜன. 14

வவுனியாவில் நேற்று மேலும் 18 தொற்றாளர்கள் இனங்காணப்பட் 31

## தனிச்சிங்கள 'தடக்கோலை' "செல்லாது, செல்லாது!"

*நீதிமன்றம் அதிரடித்தீர்ப்பு!!*

முல்லைத்தீவு, ஜன. 14

தமிழ் பேசும் நபருக்கு தனிச்சிங்களத்தில் தண்டப்பத்திரம் வழங்கப்பட்டதை அடுத்து, குறித்த நபரின் சமர்ப்பணத்தை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் அவருக்குத் தண்டம் விதிக்காமல் விடுவித்தது. 31

## நிரம்பியது இரணைமடு வெள்ள ஆபத்தில் கிளிநொச்சி!

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் 37.5 அடியாக நிரம்பியுள்ளது. இதையடுத்து அனைத்து வான்கதவுகளும் திறந்துவிடப்பட்டுள்ளன. வான் கதவுகள் ஊடாகவும் வான் மேவியும் வெள்ளம் பாய்ந்து வருகின்றது. இதனால் பெருமளவான பகுதி களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(தொடர்புடைய செய்தி 27)

## தேசியப்பட்டியல் எம்.பி; ஏற்கவேண்டும் ரணில்!

கொழும்பு, ஜன. 14

'ஐக்கிய தேசியக் கட்சிக்கான நாடாளுமன்ற அங்கீகாரம் தலைவரிடம் இருக்க வேண்டும் என்பதே 30

யாழ். பல்கலைக்கழக

## முள்ளிவாய்க்கால் தூபி: கட்டுமானம் தொடங்கியது

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து இடித்தழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை மீண்டும் அமைப்பதற் 30

## அனைத்து அரச ஊழியர்களும் கட்டாயம் சமுகமளிக்க வேண்டும்!

*அல்லாவிடில் 'லீவாம்'*

*வவுனியா மாவட்டச் செயலர் கண்டிப்பான உத்தரவு*

வவுனியா, ஜன. 14

வவுனியாவில் உள்ள அனைத்து அரச ஊழியர்களும், (முடக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்தவர்களும்) கடமைக்குக் கட்டாயம் சமுகம்தர வேண்டும். இல் 31

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
011 5 400 400
www.singer.lk
SINGER




விளைச்சலின் அறுவடை
வதனத்துப் புன்னகையில்...

ஒற்றுமையின் அடையாளச் சின்னமாய் பொங்கி வழிகின்ற
பால் போல கலாசாரத்தின் அடிப்படையில் நாம் அனைவரும்
ஒன்றிணைந்து நல்லிணக்கத்துடன் இணைவோம்...
ஆரோக்கியமான மகிழ்ச்சியான தைப்பொங்கல் நல்வாழ்த்துகள்!

தேசத்தின் வங்கியாளரான இலங்கை வங்கியிடமிருந்து.

1975 BOC CALL CENTRE

www.boc.lk

தலைமை அலுவலகம், "இலங்கை வங்கி சதுக்கம்" இல. 01,
இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 01.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# கைதிகளின் விடுதலைக்காக மாவட்டந்தோறும் போராட்டம்

**மன்னார், ஜன. 14**

**அரசியல் கைதிகளின் விடுதலை கோரி அனைத்து மாவட்டங்களிலும் குழு அமைக்கப் பட்டு இன, மத, அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் போராடுவது என்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான தேவைகளை நிறுவனங்களின் உதவியுடன் தீர்த்துவைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.**

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி ஆராயும் கூட்டம் மன்னார் நகர மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் மன்னார் இணைப்பாளர் யாட்சன் பிகிறாடோ தலைமையில் நடைபெற்ற இந்தக்கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

அரசியல் கைதிகளின் விடுதலைக்காக தொடர்ந்தும் குரல் கொடுத்து வரும் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் கடந்த ஐந்தாம் திகதி மன்னாரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து கடந்த ஏழாம் திகதியிலிருந்து 14ஆம் திகதி (இன்று) வரை அரசியல் கைதிகளின் விடுதலைக்கான வழிபாட்டு வாரமாக அறிவிக்கப்பட்டு மன்னார் மாவட்டத்தில் உள்ள இந்துக் கோவில்களில் பொங்கல் வழிபாடுகள் நடைபெற்றன. கிறிஸ்தவ தேவாலயங்களிலும் வழிபாடுகள் நடைபெற்றன.

(த213)

## 'இயற்கை வழி அங்காடி' கோண்டாவிலில் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ்ப்பாணம் கோண்டாவில் பலாலி வீதியில் இயற்கை வழி இயக்கத்தின் 'இயற்கை வழி அங்காடி' நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இயற்கைவழிசெயற்பாட்டாளர்கள் இணைந்து மேற்படி அங்காடியைத் திறந்து வைத்தனர். இயற்கைவழி வேளாண்மைக்குத் தேவையான கரைசல்கள், இயற்கை உரங்கள், பாரம்பரிய விதைகள் மற்றும் மரக்கன்றுகள் மற்றும் நஞ்சற்ற வேளாண் உற்பத்திகள் வரை சகலவற்றையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், இணையவழிக் கலந்தாய்வில், '2018 ஆம் ஆண்டில் இயற்கை வழி இயக்கத்தின் தோற்றத்துக்குக் காரணமாக இருந்த தொடர் கருத்தரங்குகளை முன்னின்று நடத்திய பேராசிரியர். சிறீஸ்கந்தராஜா, அனந்தராஜ் நவஜீவன், தமிழகத்தைச் சேர்ந்த வேளாண் அறிஞர் பாமயன், சுந்தர்ராமன், மண்புழு ரவி, கஜேந்திரன் மற்றும் கோணேஸ் போன்றோரும் கலந்துசிறப்பித்தனர்.

(த-இ)

# கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு பொங்கல் பொருள்கள் அன்பளிப்பு

## இந்துமதத் தலைவர்கள் வழங்கினர்



யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ்ப்பாணம் கோப்பாயில் அமைந்துள்ள கொரோனா சிகிச்சை நிலையத்துக்குப் பயணம் மேற்கொண்ட இந்துமதத் தலைவர்கள், அங்கு தைப் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடும் வகையில், பொங்கல் பொருள்களைக் கையளித்தனர்.

நல்லை ஆதீன குரு முதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் மற்றும் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் அங்குசென்று பொங்கல் பொருள்களை மருத்துவரிடம் ஒப்படைத்தனர்.

அங்கு சிகிச்சைபெறும் நோயாளர்கள், மற்றும் மருத்துவர்கள் மற்றும் தாதிமாருக்கு சுவாமிகள் தைப்பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்தனர். (த)





தைமகள் வருகையால்
நன்மைகள் பெருகட்டும்!

உழவர் திருநாளான தைத் திருநாளில் வளமும் நலமும் பெருகி,
நல் எண்ணமும் இன்பமும் நிறையட்டும்
உங்கள் அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் வாழ்துகள்.

Maliban

மலிபன் இல்லத்திடமிருந்து
இனிய தைப் பொங்கல் வாழ்துகள்.

பாவற்குளம்

# வான்கதவுகள் திறப்பு: மக்களுக்கு எச்சரிக்கை



வவுனியா,ஜன.14

**பாவற்குளத்தின் நீர்வரத்து அதிகரித்த காரணத்தால், மேலும் அரை அடி உயரத்துக்கு மூன்று வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.**

எனவே செட்டிக்குளம் செல்பவர்கள் மாற்றுப்பாதையை பயன்படுத்துமாறு மத்திய நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதேச பொறியியலாளர் கு.இமாசலன் கேட்டுள்ளார். தொடர்ச்சியாகப் பெய்துவரும் கனமழை காரணமாக, வவுனியா மாவட்டத்திலுள்ள அனைத்துக் குளங்களும் வான்பாய்ந்து கொண்டிருக்கின்றன.

பாவற்குளத்தின் மூன்று வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

குளத்திலிருந்து நீர் வேகமாக வெளியேறி வருகின்றது. இதன் காரணமாக வவுனியாவிலிருந்து நெளுக்குளம் நேரியகுளம் ஊடாக செட்டிக்குளம் செல்லும் வீதியை ஊடறுத்து நீர் பாய்வதால், வீதி மூடப்பட்டுள்ளது.

செட்டிக்குளம் செல்பவர்கள் பூவரசங்குளம் ஊடாகச் செல்லும் வீதியைப் பயன்படுத்துமாறும், பாவற்குளத்தின் தாழ்நில பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் தொடர்ந்தும் அவதானமாக இருக்குமாறும் கேட்டுள்ளார். (க-110)

## தென்மராட்சியில் 139 பேர் பாதிப்பு

சாவகச்சேரி.ஜன.14

மழை வெள்ளத்தால், தென்மராட்சிப் பிரதேசத்தில் 53 குடும்பங்களைச் சேர்ந்த 139 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கோயிற்குடியிருப்பு பிரிவில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 15 பேரும், கல்வயல் பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 21 பேரும், கெற்பேலி பிரிவில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 46 பேரும், நுணாவில் கிழக்கு பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 22 பேரும், நுணாவில் மத்தி பிரிவில், 3 குடும்பங்களைச் சேர்ந்த 7 பேரும் , கொடிகாமம் மத்தி பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 3 பேரும், குடமியன் பிரிவில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 15 பேரும் , நாவற்குழி மேற்குப் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். (க-9)

## விபத்தில் இளைஞர் சாவு

திருமலை. ஜன.14

திருகோணமலை ஹொரவப்பொத்தானை பிரதான வீதி கன்னியா கற்குவாரி வளைவில் மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## புற்றுநோயை கண்டறியும் கதிரியக்க மருந்துகளை உற்பத்தி செய்ய திட்டம்

கொழும்பு, ஜன.14

புற்றுநோயை ஆரம்பத்திலேயே அறிந்து கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும் கதிரியக்க மருந்துகளை இலங்கையில் உற்பத்தி செய்வதற்கான திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

தற்பொழுது இலங்கையில் நிகழும் மரணங்களுக்கு முக்கிய காரணமாக தொற்றாநோயான புற்றுநோய் காணப்படுகின்றது.

நாளாந்தம் இலங்கையில் 64 புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். இவர்களுள் 38 பேர் மரணிக்கின்றனர். புற்றுநோயை அதன் ஆரம்பத்திலேயே அறிந்து கொண்டால் அதற்கு சிகிச்சையளித்து குணமாக்க முடியும். கதிரியக்க மருந்தை உடம்பில் செலுத்தி புற்றுநோய் பரவுவதை அறிந்துக்கொள்ள முடியும். கதிரியக்க மருந்தை தேசிய ரீதியில் உற்பத்தி செய்வதற்குத் தேவையான ச்யிக்லோரோன் என்ற கருவி நாட்டில் இல்லை என்பதால் இந்த கதிரியக்க மருந்தை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது.

தற்பொழுது அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் புற்றுநோய்க்கான மருந்துக்காக வருடாந்தம் சுமார் 100 மில்லியன் ரூபாவை செலவிட்டு இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது.

அத்தோடு இதன் கதிரியக்கம் குறைவடைவதனால் 97 சதவீத அளவிலான மருந்து வீண் விரயமாகின்றது. தற்போதைய நிலைமைக்கு மத்தியில் நாட்டின் பெரும்பாலான மக்களுக்கு இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்ளும் வகையில் மருந்தை இலங்கையில் தயாரிப்பதற்கு இலங்கை அணுசக்தி சபை கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாக ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

## மரநடுகை



கிளிநொச்சி, ஜன.14

கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தால் முன்னெடுக்கப்படும் 2021ஆம் ஆண்டின் முதலாம் கட்ட மரநடுகை செயற்றிட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

உருத்திரபுரம் விளையாட்டுக்கழக வளாகத்தை பசுமைமிக்க சூழலாக அபிவிருத்தி செய்யும் முகமாக வருடாந்தம் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்ப டுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-222)

## நல்லடக்கத்துக்கு அனுமதித்தால் கொரோனாவை கட்டுப்படுத்தலாம்

மருத்துவர் ஆலோசனை

அம்பாறை.ஜன.14

கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாசாக்களை நல்லடக்கம் செய்வதற்கு அனுமதித்தால், கொரோனாத் தொற்றை இலகுவாகக் கட்டுப்படுத்தலாம் என்று அட்டாளைச்சேனை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் அகிலன் தெரிவித்துள்ளார்.

ஜனாசாக்களை எரித்து விடுவார்கள் என்ற பயத்தினாலேயே மக்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு முன்வருவதற்குப் பயப்படுகின்றனர்.

ஜனாசாக்களை அடக்கம் செய்ய அனுமதித்தால், பி.சி.ஆர். பரிசோதனைக்கு மக்கள் தாமாக முன்வருவார்கள். இதன் மூலம் இலகுவாக கொரோனாவைக் கட்டுப்படுத்தி விடலாம்.

தற்போது கல்முனைப் பிராந்தியத்தில் 800 தொற்றாளர்கள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் எழுமாறான பரிசோதனைகளில் அடையாளம் காணப்பட்டவர்களாவர்.

சுமார் 2000 பேரளவில் பிராந்தியத்தில் நோய்த் தொற்றுக்குள்ளாகி இருக்க முடியும் என்று எதிர்வு கூறலாம். இந்த நிலையில் கொவிட் தொற்று தொடர்பான எதிர்காலம் பற்றிய அச்சமுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க-இ)

## தமிழ் அரசியல் கைதிகளை கடவுள்தான் விடுவிக்க வேண்டும்

முன்னாள் எம்.பி அரியநேந்திரன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜன.14

கடவுள்தான் தமிழ் மக்களைக் காப்பாற்றவேண்டும் என தந்தை செல்வா கூறி இயற்கை எய்தினார். இப்போது கடவுள்தான் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என நாங்கள் இறைவழிபாட்டில் ஈடுபட்டுள்ளோம் என்று மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஊடகச் செயலாளருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈழவிடுதலைப் போராட்டம் அகிம்சை ரீதியாக ஆரம்பித்து அது ஆயுதப்போராட்டமாக உருவெடுத்த காலம் தொட்டு எமது இளைஞர்கள் சிறையில் அடைக்கப்பட்ட வரலாறுகள் உள்ளன. சிறைகளில் கூட எமது தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்ட வரலாறுகளும் உள்ளன.

தற்போது 147 தமிழ் அரசியல் கைதிகள் இலங்கையில் உள்ள பல்வேறு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஏழு பெண்களும் அடங்குவர். தமிழ் அரசியல் கைதிகள் எவரையும் ஜனாதிபதியோ ஆட்சியாளர்களோ கணக்கெடுத்ததாகத் தெரியவில்லை. மிகவும் துன்ப துயரத்துடன் வாழ்வா சாவா என்ற ஏக்கத்தில் அவர்கள் காலத்தைக் கடத்துகின்றனர். இந்த நிலையில்தான் நாம் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை கோரி தொடர் இறைவழிபாட்டு முயற்சியை மேற்கொண்டுள்ளோம் நிச்சயமாக இறையருளால் அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும் என்பதே எல்லோரினதும் எதிர்பார்ப்பு, என்றார். (ப)



## நிகரற்ற இணைப்பிற்கு நன்றிகள்!

பலமான சக்தியான சூரியனும், உழைப்பின் அடையாளமாக விளங்கும்
விவசாயிகளும் ஒன்றிணைந்து எமது அன்றாட வாழ்விற்கு
உறுதுணையாக இருக்கும் அந்த
நிகரற்ற இணைப்பிற்கு நன்றி கூறுவோம்.

அனைவருக்கும் இனிய
தைத் திருநாள் வாழ்த்துகள்!

www.sltmobitel.lk

SLTMOBITEL
நிகரற்ற இணைப்பு

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தித்திக்க வேண்டும் பொங்கல்!

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். ஆனால் இன்றுடன் எத்தனையோ தை பிறந்துவிட்ட போதிலும் தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழி எங்கிருக்கின்றது என்று தேடித்தேடிக் களைத்துப்போய் விட்டது தமிழ்ச் சமூகம். ஏகப்பட்ட பிரச்சினைகள், எண்ணற்ற பிடுங்குப்பாடுகள் அத்தனைக்கும் இந்தப் பொங்கலாவது தீர்வைத் தந்துவிடாதா என்பதே ஒவ்வொரு பொங்கலின்போதும் அவர்களின் பேரவா!. ஆனால் இலவு காத்த கிளி போல ஒவ்வொரு வருடமும் 'அடுத்த பொங்கலுக்கு ஏதும் தீர்வு கிட்டும்' என்றெண்ணி ஏமாந்துபோவதே கடந்தகால வரலாறு. ஆனாலும் சற்றும் மனந்தளராத விக்கிரமாதித்தன் போல இம்முறையும் அதேபோன்று அடுத்த வருடமாவது ஆனந்தப் பொங்கலாக அமைந்துவிடாதா என்ற ஏக்கத்துடன்தான் தமிழர்கள் காத்திருக்கிறார்கள்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு, அதிகரித்துவரும் பௌத்தமயமாக்கல் என்று நீண்டு செல்லும் இந்தப் பட்டியல் தமிழர் தாயகத்தின் குரல்வளையை அழுத்திக்கொல்லும் கொடூரனாகத்தான் இன்றளவும் வியாபித்து நிற்கின்றது. இவற்றில் தற்போது ஆகப்பெரும் பூதாகரமாகியுள்ள விடயம் அரசியல் கைதிகளின் விடுதலை.

அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று எத்தனையோ சுற்றுப் பேச்சுக்கள் அரச தரப்பினருடன் இடம்பெற்றுள்ளன. அரசியல் கைதிகளின் உறவுகளால் எத்தனையோ போராட்டங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கு ஆகப்பிந்திய எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணம் மாநகரப் பகுதிக்குள் 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பால் நேற்று நடத்தப்பட்ட கருத்தோவியக் கண்காட்சியையும் குறிப்பிடலாம். எனினும் நீதி என்பது இன்னமும் எட்டாக்கனிதான்.

சிறைச்சாலைக்குள் இருக்கும் இடப்பற்றாக்குறையைக் கவனத்தில்கொண்டு பல்லாயிரம் கைதிகள் அண்மையில் விடுவிக்கப்பட்டனர். இவர்களுடன் அரசியல் கைதிகளும் விடுவிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கைதிகளின் விடுவிப்பு கிட்டத்தட்ட முடிவுறும் தறுவாயில் இன்னமும் அரசின் பார்வை தமிழ் அரசியல் கைதிகளை நோக்கித் திரும்பவில்லை என்பது உண்மையில் மிகுந்த மன வருத்தத்துக்கு உரியதே.

அரசுக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடிய விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் முக்கிய தளபதிகள்கூட மறுவாழ்வு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். எனினும், பாரதூரமற்ற குற்றங்களை இழைக்காத அரசியல் கைதிகள் 10, 15, 20 வருடங்கள் என தம் வாழ்வின் பெரும் பகுதியை சிறைக்குள் செலவிட்டுக் கொண்டிருப்பது வேதனையானதே.

நீதித்துறையால் மரணதண்டனை விதிக்கப்பட்டவர்கள் கூட ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் சந்தேக நபர்கள் என்று குறிப்பிடப்பட்ட ஐவருக்கு எதிரான வழக்கு சட்டமா அதிபரால் திரும்பப் பெறப்பட்டதை அடுத்து அவர்கள் ஐவரும் அந்த வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஒரு வழக்கை கைவாங்கும் அளவுக்குத் தற்துணிவைக் கொண்டிருக்கும் சட்டமா அதிபர் அரசியல் கைதிகள் விடயத்தில் ஏன் இத்தனை மௌனம் என்பது புரியாத புதிர்தான். பிள்ளையான் விடயத்தில் கைக்கொண்ட அதே வழியை தமிழ் அரசியல் கைதிகள் விடயத்திலும் பின்பற்றினால் பல வீடுகளில் இன்றைக்கு ஆனந்தம் பொங்கியிருக்குமே.

கொரோனாவால் தமிழ் அரசியல் கைதிகள் பாதிக்கப்பட்ட போதும் அவர்களை விலங்குகளைப் போலவே நடத்தியது அரசு. தற்போது ஒரு கைதி உணவுத் தவிர்ப்பு போரில் ஈடுபட்டுள்ள போதும், அது பற்றிய எந்த அக்கறையுமில்லாமல் தன்பாட்டுக்கு கண்களை இறுக மூடியிருக்கிறது அரச இயந்திரம்.

இவ்வாறான பேரவலங்களுக்குள் மனச்சுமைக்குள் தான் நாம் இன்றையதினம் தைத்திருநாளை எதிர்கொள்கின்றோம். அடுத்த தைத் திருநாளாவது தமிழர்கள் வாழ்வில் விடிவைக் கொண்டுவர வேண்டும். அரசியல் கைதிகள் தம் குடும்பத்துடன் பெருகிடும் மகிழ்வோடு பொங்கிப் படைத்திடும் திருநாளாக, தித்திப்போடு அடுத்த பொங்கலாவது அமையவேண்டும் என்பதே ஒவ்வொரு தமிழர்களினதும் பிரார்த்தனையாகும்.

## இன்றைய கேலிச்சித்திரம்



நன்றி - நாமல் அமரசிங்கே

## ஐ.தே.கட்சிக்குள் அதிரடி மாற்றம்



கொழும்பு, ஜன.14

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று முற்பகல் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சிறிகொத்தவில் நடைபெற்றது.

அதில் கட்சியின் நிர்வாகப் பதவிகளுக்கு புதியவர்களை நியமிப்பதற்கு கட்சியின் மத்திய செயற்குழு அனுமதி வழங்கியது. ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளராக வஜிர அபேவர்தனவும், உப தலைவராக அகிலவிராஜ் காரியவசமும், பொதுச்செயலாளராக பாலித ரங்கே பண்டாரவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சாகல ரத்னாயக்க, அனோமா கமகே உட்பட மேலும் சிலருக்கு உப தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது. பிரதித் தலைவர் பதவியில் நீடிப்பதற்கு ருவான் விஜேவர்தனவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைக்கப்பெற்ற தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை யாருக்கு வழங்குவது என்பது தொடர்பில் முடிவு எடுக்கப்படவில்லை. ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என்பதே பெரும்பாலானவர்களின் கோரிக்கை என்று கட்சியின் புதிய தவிசாளர் தெரிவித்தார். (எ-44)

## இந்திய மீனவர்கள் 26 பேருக்கு விடுதலை

யாழ்ப்பாணம், ஜன.14

இந்திய மீனவர்கள் 26 பேர் கடுமையான நிபந்தனைகளுடன் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளனர். இனி வரும் காலத்தில் இதே குற்றச் சாட்டில் கைதுசெய்யப்பட்டால் இரு ஆண்டு கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்றும் நீதவான் எச்சரித்தார்.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களின் இழுவைப் படகு, வலைகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இவர்கள், நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களைக் கடும் எச்சரிக்கையுடன் நீதிவான் ஜூட்சன் விடுவித்தார். மீனவர்களின் படகு, வலை, அனைத்து தொலைபேசிகள் மற்றும் எக்கோ இயந்திரம் உட்பட அனைத்து பொருள்களும் அரசுடமையாக்கப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் காரைநகர் கடற்படைத் தளத்தில் தனிமைப்படுத்தப்பட்டு இரண்டு தடவைகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரேயே நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். (எ-26)

## வீசப்படும் முகக்கவசங்கள்; மாசுபடும் கரையோரங்கள்

கொழும்பு, ஜன.14

கொழும்பை அண்மித்த கரையோரங்களில் முகக்கவசங்கள் உள்ளிட்ட மருத்துவ கழிவுப்பொருள்கள் குவிந்துள்ளன. அவற்றை அகற்றுவதற்கு விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் பொது முகாமையாளர், கலாநிதி டேர்னி பிரதீப் தெரிவித்துள்ளார். கழிவு நீரோடைகள், ஆறுகள், வடிகான்கள் என்பன கடலுக்குள் கலக்கும் பகுதிகளிலேயே அதிகளவில் கழிவுகள் குவிந்துள்ளன.

மருத்துவக் கழிவுகள் உள்ளிட்ட குப்பைகளை உரிய முறையில் அகற்றுவதற்கு அனைவரும் ஒத்துழைத்து செயற்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ-இ)

FERENTINO

# தைத்திருநாளில் புதுப்பொழிவுடன் புத்துணர்வு பெறும் தேசம்



### அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் ஜனாதிபதி

21ஆம் நூற்றாண்டானது அறிவை மையப்படுத்திய நூற்றாண்டாகவே கருதப்படுகின்றது. 21 ஆம் நூற்றாண்டில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கு தந்திரோபாயங்களுடன் முதலீடு செய்வதற்கும், அவற்றை எமது கல்வி முறைகளில் சேர்ப்பதற்கும், பொருளாதாரத்துடன் ஒன்று சேர்ப்பதற்கும் நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதனடிப்படையில், எமது மக்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு பாரியளவில், சமூக ரீதியிலான மாற்றங்களை மேற்கொண்டு தொழில்நுட்ப நவீனத்துவமிக்க கலாசாரத்தை (Culture of Technological Innovation) நாம் உருவாக்க வேண்டும்.

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டம்.



### கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் பிரதமர

எமது நாடு பொருளாதார ரீதியில் பலமடைய வேண்டுமெனின், பாரியளவில் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி செயற்றிட்டங்களை புதிதாக உருவாக்குதல் வேண்டும். வெளிநாட்டு சந்தையை மையமாகக்கொண்ட சிறந்த டயர் உற்பத்தித் துறையில் காலடி எடுத்து வைத்துள்ள Ferentino, குறித்த பொருளாதார இலக்கை அடையத்தக்க உற்பத்தித் துறையாகும். அத்துடன் உள்நாட்டு உற்பத்திகளுக்கு வெளிநாடுகளது வரவேற்பை பெற்றுக்கொடுப்பதும் பாரிய பலமாகும். எமது எதிர்பார்ப்பு Ferentino போன்ற உயர்தரமான முடிவுப் பொருட்கள், வெளிநாட்டு சந்தை வாய்ப்பை உறுதி செய்வதன் ஊடாக வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஈர்ப்பை பெற்றுக்கொள்வதாகும்.

## ஜனாதபதி மற்றும் பிரதமர் ஆகியோரது கரங்களால
## Ferentino Tyre Corporation (Pvt.) Limited
## 2021 ஜனவரி மாதம் 14 ஆம் திகதி ஆகிய இன்று திறந்து வைக்கப்படுகின்றது.



### கௌரவ பிரசன்ன ரணதுங்க

சுற்றுலா மற்றும் விமான சேவைகள் அமைச்சர

பல்வேறு துறைகளின் ஊடாக பாரியளவிலான சமூக வளையமைப்பினை ஒன்றிணைத்து மேற்கொள்ளப்படும் Ferentino இனது உற்பத்தி நடவடிக்கைகள் பாராட்டத்தக்கது. இது குறிப்பிட்டளவு அந்நிய செலாவணியை நாட்டுக்குள் எடுத்து வரக்கூடிய உற்பத்தித் துறையாகும். Ferentino உற்பத்தித் துறையில் நான் காணக்கூடிய மிகவும் முக்கியமான நற்குணம் என்னவென்றால், உள்நாட்டு மற்றும் பிராந்திய வளங்களை உபயோகித்து சர்வதேச சந்தையை அடைவதாகும்.



### கௌரவ டீ. வீ சானக்க தினூஷான்

விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலய அபிவிருந்தி இராஜாங்க அமைச்சர்.

பல நூற்றாண்டு கால பழைமை வாய்ந்த இலங்கை றப்பர் உற்பத்தியானது துரிதமாக புதிய கோணத்தில் பயணிக்கத் தொடங்குவது பற்றி எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். இன்றைய தினம் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் தெற்காசியாவின் மாபெரும் டயர் உற்பத்தி தொழிற்சாலையின் ஊடாக எமது நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தவது மட்டுமன்றி தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்கக் கூடியதாகவும் இருக்கும். எமது இளைஞர்களது பலத்தால் உற்பத்தியாகும், உலகின் எந்தவொரு டயர் உற்பத்தியுடனும் குறைத்து மதிப்பிட முடியாதளவு உயர் தொழில்நுட்பத்துடன், மற்றும் அதியுயர் தரத்தில் உற்பத்தியாகும் இந்த டயர்கள் வெகு விரைவில் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் சாலைகளில் ஓடும் வாகனங்களுக்கு பயன்படுத்தப்படும் இலங்கையின் பெருமைமிகு வர்த்தக நாமமாக, உலக டயர் சந்தையின் முன்னணி உற்பத்தியாக காணக்கூடியதாக இருக்கும்.



### திரு. சஞ்சய மொஹொட்டால

தலைவர் - இலங்கை முதலீட்டுச் சபை

உலக பொருளாதார போக்கினை அறிந்து பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல் காலத்தின் தேவையாகும். ஏற்றுமதி பல்வகைமையை அறிந்து கொண்டு புதிய பொருளாதார மூலங்களை தேடிச் செல்லல் இலங்கை முதலீட்டுச் சபையின் நோக்கமாகும். தற்போதைக்கு ஒரு பில்லியன் பெறுமதியான றப்பர் ஏற்றுமதி வருமானத்தை 01-03 பில்லியன் அமெரிக்க டாலர் வரை அதிகரிக்கும் எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்வதற்கு இவ்வாறான உற்பத்திகள் பாரிய உந்து சக்தியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இதனூடாக கிடைக்கப்பெறும் பொருளாதார பிரதிபலன்களை நாட்டின் சகல பிரஜைகளுக்கும் பகிர்ந்தளிப்பதன் ஊடாக திருப்திகரமான சமூகம் உருவாகும்.

- தெற்காசியாவின் மாபெரும் டயர் உற்பத்தி தொழிற்சாலை.
- உலகின் மாபெரும் டயர் தொழில்நுட்ப கலாசாலை.
- வெளிநாட்டு முதலீட்டாளர்களை நாட்டுக்குள் அழைத்து வரும் உற்பத்தித் துறை.
- றப்பர் பயிர்ச் செய்கையின், உற்பத்திகளின், தோட்ட உரிமையாளர்களின் தரத்தை உயர்த்தச் செய்வதற்கான பலம்.
- உலகை வெல்லும் ஐரோப்பிய தொழில்நுட்பம் மற்றும் இத்தாலியின் தொழில்நுட்ப அறிவு நாட்டின் இளைஞர் யுவதிகளுக்கு.



## அன்டிஜென் பரிசோதனை தொடரும்

கொழும்பு,ஜன.14
மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறுவோருக்கு முன்னெடுக்கப்பட்ட ரெபிட் அன்டிஜன் பரிசோதனை, தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித்ரோஹண தெரிவித்துள்ளார்.
மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறுவோருக்கு 11 இடங்களில் பரிசோதனை முன்னெடுக்கப்படும்.
கடந்த டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் ஜனவரி மாதம் 5 ஆம் திகதி வரை ரெபிட் அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.
இதன்போது பலர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

## ரஞ்சனுடன் ரணில் பேச்சு

கொழும்பு,ஜன.14
ரஞ்சன் ராமநாயக்கவுக்கு தண்டனை வழங்கப்பட்ட சிறிது நேரத்திலேயே, முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, வழக்கறிஞர்களின் உதவியுடன் ரஞ்சனுடன் தொலைபேசியில், உரையாடினார். அவரது நலனை விசாரித்தார்.
பதிலுக்கு ராமநாயக்க, எனக்கு ஜனாதிபதியின் மன்னிப்புக் கிடைக்கும் என்று நம்புகிறேன் என்று நகைச்சுவையாக விக்ரமசிங்கவுக்குத் தெரிவித்தார் என்று கூறப்படுகிறது.
நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட முன்னாள் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு, 4 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை உயர் நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளது. (க-இ)

### வடக்குக்கு
# ரயிலில் வருவோர் பதிவு செய்யவும்
### சுகாதாரத் திணைக்களம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.14
ரயில் சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், கொரோனா ஆபத்து பிரதேசங்களிலிருந்து வடக்கு மாகாணத்துக்குள் வருகை தரும் பயணிகள், அந்தந்தப் பிரதேசங்களில் சுகாதாரப் பிரிவினருடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.



ரயில் மூலம் வடக்கு மாகாணத்துக்குள் வருகை தரும் பயணிகள், தங்கள் இடங்களுக்கு வந்த பின்னர், உடனடியாக அந்தந்த பிரதேசத்தில் உள்ள சுகாதார பிரிவினருக்கு அதுபற்றித் தெரியப்படுத்தப்பட வேண்டும். பொது மக்கள் இவ்வாறு வருகின்றவர்களின் தகவல்களை அறிந்தால், சுகாதார பிரிவுக்கு உடன் அறிவிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (க-214)

## செம்மணி பால வான்கதவுகளை திறக்கக் கோரிக்கை

சாவகச்சேரி,ஜன.14
நாவற்குழி செம்மணிப் பாலத்தின் வான்கதவுகளைத் திறந்து, தென்மராட்சி தெற்கு பிரதேசத்தில் அழிவடையும் நெற்பயிர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நெற்செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
கைதடி, மறவன்புலவு, தச்சன்தோப்பு, நாவற்குழி, தனங்களப்பு போன்ற பிரதேசங்களின் வயல்களில் நிரம்பியுள்ள வெள்ளம் வாய்க்கால்கள் வழியாக கடலேரிக்குள் வீழ்கின்றது. இந்த வெள்ளம் நாவற்குழி செம்மணி ஊடாக வெளியேறுகின்றது.
கடந்த திங்கட்கிழமை பெய்த மழையால் வயல்கள் விளைந்த கதிர்களுடன் காணப்படுகின்றன. தொடர்ந்து மழை பெய்து வரும் நிலையில், செம்மணிப் பால கதவுகள் இன்னமும் திறக்கப்படவில்லை. அதனால் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாய நிலை காணப்படுகிறது.
உடனடியாக செம்மணிப் பால வான் கதவைத் திறந்து நீரை வெளியேற்ற அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (க-9)

## முதலையிடம் சிக்கியவர் காயங்களுடன் தப்பினார்

சாவகச்சேரி,ஜன.14
வயலில் மாட்டுக்குப் புல் அறுத்த முதியவர், முதலையிடம் சிக்கினார்.
இந்தச் சம்பவம் மட்டுவில் வடக்கில் நேற்று இடம்பெற்றது.
வரம்புகளில் காணப்பட்ட புற்களை அறுத்துக் கொண்டிருந்தபோது, மறைந்திருந்து முதலை முதியவரின் காலைக் கடித்துள்ளது. முதலை கடித்ததும் அவர் காலை உதறியதால் தப்பித்துக் கொண்டார்.
காலில் காயமடைந்த முதியவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இதேவேளை நேற்று மதியம் வரை மட்டும் 7 பேர், நாய்களால் கடியுண்ட நிலையில், சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## யாழ். மாநகரத்தில் 263 பேருக்கு டெங்கு

யாழ்ப்பாணம்,ஜன.14
யாழ்.மாநகர பிரதேசத்தில் கடந்த ஆண்டில் மட்டும் 263 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஜனவரி மாதத்திலேயே அதிகளவான டெங்கு நோய்த் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.
ஜனவரி மாதம் 184 பேரும், பெப்ரவரி மாதம் 20 பேரும், மார்ச் மாதம் 3 பேரும், ஏப்ரல் மாதம் ஒருவரும், மே மாதம் 10 பேரும், ஜூன் மாதம் 6 பேரும், ஜூலை மாதம் 6 பேரும், ஓகஸ்ட் மாதம் 7 பேரும், செப்ரெம்பர் மாதம் 14 பேரும், ஒக்ரோபர் மாதம் 6 பேரும், நவம்பர் மாதம் 3 பேரும், டிசெம்பர் மாதம் 3 பேரும் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர். (க-17)



## தொழில் முயற்சியாளர் இருவருக்கு நன்கொடை

சாவகச்சேரி,ஜன.14
கொவிட் -19 தொற்றுக் காரணமாக தொழில் முயற்சி பாதிக்கப்பட்ட, தென்மராட்சியைச் சேர்ந்த இருவருக்கு ஹற்றன் நஷனல் வங்கியால் நன்கொடை வழங்கப்பட்டது.
வட பிராந்தியத்தில் தெரிவு செய்யப்பட்ட 28 பயனாளிகளில், சாவகச்சேரி கிளை வாடிக்கையாளர்களுக்கு நேற்று நன்கொடை வழங்கப்பட்டது.
வங்கியின் பிராந்திய வர்த்தக முகாமையாளர் க.வாதுளன் முதற்கட்டமாக தலா 50 ஆயிரம் ரூபாவுக்கான காசோலைகளை பயனாளிகளுக்கு வழங்கினார். (க-9)



பொருண்மியம் நலிவுற்ற மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் வகையில், 33 ஆவது கட்டமாக, முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள 64 பாடசாலைகளைச் சேர்ந்த ஆயிரத்து 6 மாணவர்களுக்கு 5 ஆயிரத்து 30 குறிப்பேடுகள் வழங்கப்பட்டுள்ளன. (க-246)

## 469 பேருக்கு உதவிகள்

சாவகச்சேரி,ஜன.14
சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர்கள் மற்றும் அங்கத்தவர்களுக்கு பொங்கல் பொதிகளும், மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.
சங்கத்தால் 238 பேருக்கு பொங்கல் பொதிகளும், சமாசத்தால் 231 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (க-9)

## பஸ் நிலையத்தில் மீண்டும் பி.சி.ஆர்



மன்னார், ஜன.14
மன்னார் புதிய பஸ் நிலையத்தில் மீண்டும் நேற்று பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.
மன்னார் பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி ரி.வினோதன் தலைமையில் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.
கடந்த வாரம் மன்னார் புதிய பஸ் நிலையத்தில் திடீரென மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில், பஸ் சாரதி ஒருவருக்கும், வர்த்தகர் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. திடீரென நேற்று 300 பேருக்குப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. (க-213)



## களைகட்டிய பொங்கல் வியாபாரம்

யாழ்ப்பாணத்தில் சந்தைகள் மூடப்பட்டுள்ள போதும், வீதியோரத்திலும், வியாபார நிலையங்களில் பொங்கல் பொருள்களை வாங்குவதற்கு மக்கள் நேற்று முண்டியடித்தனர்.
சாவகச்சேரி கச்சாய் வீதியில் விற்பனை நிலையங்கள் அதிகம் காணப்பட்டதால், அதிகளவான மக்களை அங்கு காண முடிந்தது. (க-9)




## சமத்துவமாய் கொண்டாடுவோம்..!



தைமகளின் வருகை நாளில்
தமிழ் மணக்க குலவையிட்டு
விளைச்சலால் சோறு தந்த
விவசாயத்தை போற்றுவோம்..!

பச்சரிசி அச்சு வெல்லம்
படையலாக பொங்கல் வைச்சு
பகலவனை வணங்கும் நாளில்
பகைவரையும் வாழ்த்துவோம்..!

தேன்கரும்பும் வாழைப்பழமும்
தேடி தேடி வாங்கி வந்து
பசி உள்ள வயிற்றுக்கு
ருசி தந்து மகிழ்ந்திடுவோம்..!

சகலமும் குறைவின்றி
சந்தோசம் பொங்கி வர
சாதி மத பேதமின்றி
சமத்துவமாய் கொண்டாடுவோம்..!

ந.இராஜ்குமார்.






# மக்களை அச்சமூட்டும் நிலையில் நாட்டின் அரசியல் தலைவர்கள்!!

## அரசை சாடுகிறார் கலையரசன் எம்.பி

அம்பாறை, ஜன.14

**யுத்தத்தின் பின் மக்களை அரவணைக்கும் எண்ணம் இல்லை என்பது ஜனாதிபதியின் பேச்சில் தெரிகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராஜா கலையரசன் தெரிவித்தார்.**

அம்பாறை மாவட்டத்தின் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து உலர் உணவுப்பொருள்களை வழங்கி வைத்த பின்னர் ஊடகங்களுக்கு மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் இருக்கும் அரசியல் தலைவர்கள் மக்களை அச்சமூட்டும் வகையில் அரசியல் செய்து வருகின்றனர்.

குறிப்பாக மக்கள் பாதுகாப்பு அமைச்சர் மோசமான இனவாத அடிப்படையிலான வார்த்தைகளை பேசுவது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துகிறது.

தொடர்ச்சியாக தமிழ் மக்களை அடக்கி ஆள வேண்டும் என்ற வகையில் அவர்களது செயற்பாடுகள் இருக்கின்றன. நாங்கள் இந்த நாட்டில் தொடராக ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதையே விரும்புகின்றோம். அவர்களது பேச்சில் சிறுபான்மை சமூகம் வாழ முடியாது என்றதொரு கருத்து தொனிக்கிறது. நாட்டின் ஜனாதிபதி யுத்தத்தை உதாரணம் காட்டி மிக மோசமாக பேசியிருக்கின்றார்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் ஏனைய மக்களையும் அரவணைத்து நாட்டின் பிரஜைகள் என்ற அடிப்படையில் செயற்பட வேண்டும். இது நாட்டை ஆளுகின்ற தலைவர்களது தலையாய கடமையாகும். மாறாக எம்மை மாற்றுப் பார்வை கொண்டு பார்க்கும் நிலை மாற வேண்டும். - என்றார். (ந)

# தென்மராட்சியில் மாடுகள் கடத்தல்

கொடிகாமம், ஜன.14


கட்டப்பட்டிருக்கும் மாடுகள் இனந்தெரியாதவர்களால் கடத்தப்படும் சம்பவங்கள் தென்மராட்சிப் பிரதேசத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்று வருகின்றன. தொடர்மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் மாடுகளைக் கட்டி வளர்ப்பதற்கு மக்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதனால் வெள்ளம் அற்ற பகுதிகளில் மாடுகள் கட்டப்பட்டுவரும் சந்தர்ப்பங்களில் இந்தக் கடத்தல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்துக்கு அருகாமையில் கடந்த திங்கட்கிழமை காலை வளவில் கட்டப்பட்டிருந்த ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபா பெறுமதியான கலப்பின மாடுகள் இரண்டும், அதற்கு முதல் நாள் நாளொன்னுக்கு 10 லீற்றர் பால் கறக்கும் ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபா பெறுமதியான கறவையின மாடொன்றும் திருடப்பட்டுள்ளன.

சம்பவங்கள் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-159)

# மன்னார் மாவட்டத்தில் 31 பேருக்கு கொரோனா



மன்னார்.ஜன.14

மன்னார் மாவட்டத்தில் 31 பேர் இதுவரை கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் தற்போது வரை 14 நபர்கள் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 11 பேர் எருக்கலம்பிட்டி, ஒருவர் புதுக்குடியிருப்பு, ஒருவர் காத்தான்குடி, மேலும் ஒருவர் நிக்கரவெட்டியவை சேர்ந்தவர்கள்.

மேலும் மன்னார் நகர் உப்புக்குளம் பகுதியில் கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட 114 பேரது பி.சி.ஆர்.பரிசோதனைகளின் முடிவுகளை எதிர்பார்த்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-56)

# ‘சிப்தொற’ புலமைப்பரிசில் ஆரம்ப வைபவ நிகழ்வு

தென்மராட்சி பிரதேசத்தில் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு சிப்தொற புலமைப் பரிசில் வழங்குதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த க.பொ.த.உயர்தர வகுப்புகளில் இணையும் மாணவர்களுக்கு அவர்களுடைய கல்விக் காலத்தில், மாதாந்தம் தலா ஆயிரத்து 200 ரூபா சமுர்த்தி திணைக்களத்தால் வழங்கப்படுகிறது. அந்த மாணவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடாத்தி அதில் புள்ளிகள் அடிப்படையில் அனைத்து மாணவர்களின் பெயர்ப் பட்டியல்களும் சமுர்த்தி திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படும். பட்டியலில் தெரிவுசெய்யப்படும் மாணவர்களுக்கு மாதாந்தம் கல்வி மேம்பாட்டு நிதி வழங்கப்படும். கடந்த வருடம் அனுப்பப்பட்ட பெயர்ப் பட்டியல் பிரகாரம் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான நிதி கடந்த டிசெம்பர் மாதம் திணைக்களத்தால் பிரதேச சமுர்த்தி அலகினருக்கு அனுப்பப்பட்டு மாணவர்களின் குடும்பத்தினர் வதியும் சமுர்த்தி வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இந்த நிதியை வைபவ ரீதியாக வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. (வ-9,-159)

# வர்த்தகர்களின் விவரம் திரட்டல்

வவுனியா.ஜன.14

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்து வருகின்ற நிலையில், வர்த்தக நிலையங்கள் மறு அறிவித்தல் வரை முடக்கப்பட்டுள்ளன.

வர்த்தகர்கள் மற்றும் ஊழியர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு சுகாதாரப் பிரிவினருடன் வவுனியா வர்த்தக சங்கத்தினர் இணைந்து பல்வேறு செயற்றிடங்களை முன்னெடுத்துத்துள்ளனர்.

மாவட்டத்திலுள்ள அனைத்து வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன. எனவே உரிமையாளர் மற்றும் ஊழியர்களின் விவரங்களை 076 662 8386 என்ற இலக்கத்துக்கு குறுந்தகவல் அல்லது வட்சப் , வைபர் செயலி மூலம் அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது. (க-18)

## கடந்த 3 ஆண்டுகளில்

# வடக்கில் 36,600 பேருக்கு அரவணைப்புக் கடன்

யாழ்ப்பாணம்.ஜன.14

வடக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவு அமைப்புக்களால் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 36 ஆயிரத்து 600 பேருக்கு அரவணைப்பு கடன் வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மற்றும் சிக்கனக் கடன் வழங்கும் சங்கங்கள் போன்றவற்றின் ஊடாக இந்த அரவணைப்புக் கடன் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது என்று மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் இந்த கூட்டுறவு அரவணைப்புக் கடன் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த கடன் திட்டத்தில் ஆரம்பத்தில் பயனாளி ஒருவருக்கு 20 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது. பின்னர் அத் தொகை அதிகரிக்கப்பட்டு தற்போது 60 ஆயிரம் ரூபா வரை வழங்கப்படுகிறது.

இந்த கூட்டுறவு அரவணைப்புக் கடனுக்கு பயனாளிகள் தொடர்ந்தும் விண்ணப்பித்து வருகின்றனர் என்று கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஜ-17)

# மேல் மாகாணம் மீண்டும் முடங்கும்?

## பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு.ஜன.14

மேல் மாகாணத்தை மீண்டும் முடக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொழும்பு, வடக்கு மற்றும் மத்திய கொழும்பு பகுதிகளில் நீண்ட காலமாகத் தனிமைப்படுத்தப்பட்டிருந்த பகுதிகள் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளன.

எனினும் அந்த பகுதிகளிலுள்ள மக்கள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

விதிமுறைகளை மக்கள் உரியமுறையில் பின்பற்றுகின்றார்களா என்று உறுதிப்படுத்திக் கொள்வதற்காக சிவில் உடையில் பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளைக் கடைப்பிடிப்பதில்லை என்று தெரியவந்துள்ளது.

சுகாதார சட்ட விதிகளுக்குப் புறம்பாக ஒன்றுகூடி கலந்துரையாடல்களில் ஈடுபடல், உணவு உட்கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளை மக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

தொடர்ந்தும் இவ்வாறு செயற்பட்டால், அந்தப் பகுதிகளில் மீண்டும் கொவிட்-19 வைரஸ் கொத்தணிகள் உருவாகுவதற்கு வாய்ப்புள்ளது.

அதனால் அந்தப் குதிகளை மீண்டும் தனிமைப்படுத்தி வைக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## வெள்ளம் பாதித்த இடங்களுக்கு மாவட்டச் செயலர் விஜயம்

கிளிநொச்சி, ஜன.14

கிளிநொச்சியில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை கிளிநொச்சி மாவட்டச் செயலர் உள்ளிட்ட குழுவினர் நேற்றுப் பார்வையிட்டனர். கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள முரசுமோட்டை ஐயன் கோவிலடி பகுதி மற்றும் கண்டாவளை கிராம அலுவலர் பிரிவுகளில் ஏற்பட்ட வெள்ள நிலை தொடர்பான கள ஆய்வை அவர்கள் மேற்கொண்டனர். கிளிநொச்சி இரணைமடு குளத்தின் வான் கதவுகள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் அந்தப் பகுதிகளில் வெள்ள அனர்த்தம் ஏற்படும் என முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் பாதிக்கப்பட்ட பகுதிகளை கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன், கண்டாவளை பிரதேச செயலாளர் ரி.பிருந்தாகரன் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ



உதவிப் பணிப்பாளர் எஸ்.கோகுலராஜா, இரணைமடு நீர்பாசன பொறியியலாளர் ச.செந்தில்குமரன், கிராம அலுவலர் உள்ளிட்டோர் பார்வையிட்டனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என மாவட்டச் செயலர் இதன்போது தெரிவித்தார். (வ6)

## மரக்கறி விற்பனை மீண்டும் ஆரம்பம்



வவுனியா, ஜன.14

கொரோனாத் தொற்றுப் பரவலால் வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த மொத்த மரக்கறி விற்பனை மற்றும் கொள்வனவு நடவடிக்கைகள் மாவட்டச் செயலர் சமன்பந்துல சேனவால் நேற்று மீள ஆரம்பித்து வைக்கப்பட்டன. வவுனியா நகரில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையால் நகரின் சில பகுதிகள் முடக்கப்பட்டதுடன், வர்த்தக நடவடிக்கைகளுக்கும் மறு அறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டன. இந்நிலையில் மரக்கறி வியாபாரிகள், விவசாயிகளின் நலனைக் கருத்திற்கொண்டு மன்னார் வீதியில் அமைந்துள்ள காமினி மகா வித்தியாலய மைதானத்தில் மரக்கறி மொத்த கொள்வனவு மற்றும் விற்பனையை மேற்கொள்ள இடம் ஒதுக்கப்பட்டது. ஆனால் பெய்துவரும் தொடர் மழையால் இவ்விடத்தைப் பயன்படுத்த முடியாத நிலைக்கு வியாபாரிகள் தள்ளப்பட்டனர். இதையடுத்து 291 மில்லியன் ரூபா செலவில் வவுனியா கண்டி வீதியில் அமைக்கப்பட்டு பயன்பாடற்ற நிலையில் காணப்படும் பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறி மொத்த கொள்வனவு மற்றும் விற்பனையை தற்காலிகமாக மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (வ-18)

## குளங்கள் வான் பாய்வதால் போக்குவரத்து தடைப்பட்டது



முல்லைத்தீவு, ஜன.14

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்துக்குட்பட்ட அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டிய குளம் என்பன வான்பாய்வதால் அக்கராயனில் இருந்து துணுக்காய் செல்லும் வீதி ஊடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. குளங்களின் வான்கட்டுகளுக்கு கீழ்பகுதியாலேயே இந்த வீதி செல்கின்றது. அவை வான்பாய்வதால் வீதியில் இரண்டு அடிக்கு மேல் தண்ணீர் பாய்கின்றது. இதனால் அந்த வழியூடான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக நீர்வரத்து அதிகமாக காணப்படுவதால் நேற்று மூன்றாவது நாளாகவும் அந்த வீதியால் பயணிக்கமுடியாத நிலை காணப்பட்டது. இவற்றைக் கருத்திற்கொண்டு இரண்டு குளங்களின் கீழுள்ள பாதைக்கு பாலம் அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-19)



### சுற்றுலாவிகளுக்கான வேலைத் திட்டம் இல்லை

# கொரோனா ஒழிப்பிலிருந்து விலக சுகாதார பரிசோதகர் சங்கம் முடிவு

**கொழும்பு, ஜன.14**

**சுற்றுலாப் பயணிகளுக்கான முறையான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாவிடில் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளிலிருந்து விலகுவதற்கு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.**

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் உப்புல் ரோஹண தெரிவித்துள்ளதாவது,

நாட்டுக்குள் வருகைதரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், சுகாதார ஆலோசனைகளுக்கு அமைய சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்வதற்கான முறையான வேலைத் திட்டம் ஒன்றை விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும். இல்லையேல் நாடு தழுவிய ரீதியில் கொரோனா வைரஸ் ஒழிப்புச் செயற்பாடுகளில் இருந்து, அடுத்த இரு வாரங்கள் விலகியிருக்க, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தீர்மானித்துள்ளனர். சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாமலும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் கண்காணிப்பின் கீழ் இல்லாமலும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறியுள்ளனர்.

இதனால் தனிமைப்படுத்தல் சட்டத்தை கடைப்பிடிக்குமாறு மக்களுக்கு ஆலோசனை வழங்க முடியாதுள்ளது- என்றார். (வ-இ)

நல்லூரான் செம்மணி வளைவு இன்றைய தினம் திறந்து வைக்கப்படுவதை முன்னிட்டு இந்த வாழ்த்துக் கவிதை பிரசுரமாகிறது.



## நல்லூரான் செம்மணி வளைவு

நல்லூரான் செம்மணி வளைவு
நற்றமிழ் பதியிலமைந்த வாசல்கதவு
எல்லோரின் விருப்புக்கு வடிவம் கொடுத்தெழுந்தது
எழிலார்ந்த நல்லைக்கந்தனின் திருவருளோடு
வல்லமைச் செழிப்போடு கந்தபுராண விழுமியம் திகழ
வாஞ்சையோடு செம்மணியில் நிமிர்ந்தது வளைவு
நல்லன மலியும் புனித நெறியின் மாண்புடன்
நயங்களைப் பெருக்கியது நல்லூரான் வளைவு

எல்லை காண அழகோடு எங்கள் தேசத்தில் நிமிர்ந்தது
யாழ்ப்பாண கந்தபுராண கலாசார நெறிகளை
நயம்பட தாங்கியெழுந்தது நல்லூரான் வளைவு
வாழ்வாங்குவாழும் நெறிகளின் இலக்கணமாய்
வனப்புடன்திகழும் வளைவாய் வடபுலத்திலெழுந்தது
புகுந்தவர் வரும் பொழுதுகளை பதியும் மாடமாய்
பொங்கல் திருநாளில் வாசல் திறந்தது வாழி

**மதுரைகவி. காரை எம்.பி. அருளானந்தன்**

## கிளி. இந்துவில் வரவேற்பு நிகழ்வு

கிளிநொச்சி, ஜன.14

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் புதிதாக கடமையைப் பொறுப்பேற்ற அதிபர் திருமதி இ.மீனலோஜினி மற்றும் பிரதி அதிபர் ம.உமாசங்கர் ஆகியோரை வரவேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் பொன்சபாபதி மண்டபத்தில் பிரதி அதிபர் மு.பிறேம்குமார் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் முன்னாள் அதிபர் கி.விக்னராஜா, பிரதி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர். பாடசாலையின் முன்னாள் அதிபர் மற்றும் புதிதாக கடமையைப் பொறுப்பேற்ற அதிபர், பிரதி அதிபர் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். (ந-159)

## 250 குடும்பங்களுக்கு பொங்கல் பொதிகள்

கோண்டாவில், ஜன.14

கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த பொருளாதார நிலையில் பின்தங்கிய 250 குடும்பங்களுக்கு பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன. கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் மற்றும் குமரன் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தின் ஊடாக இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-222)



## இலங்கையரை தாயகம் அழைக்க நடவடிக்கை

கொழும்பு, ஜன.14

கொரோனாத் தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை நேற்று முதல் நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படும் விதத்தில் 300 பேர் நாளாந்தம் நாட்டுக்கு அழைத்து வரப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜன.14

20 லட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதை மாத்திரைகளுடன் ஒருவர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார். அத்துருகிரிய போதிராஜ மாவத்தையைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவர் ஐஸ் போதைப் பொருள்களை விற்பனை செய்யும் பிரபல வர்த்தகர் ஒருவரின் உதவியாளர் என பொலிஸாரால் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## தண்ணீர் வாளியில் மூழ்கி 2 வயது சிறுமி உயிரிழப்பு

புதுக்குடியிருப்பு. ஜன.14



இரண்டு வயதுடைய சிறுமி ஒருவர் வீட்டில் நீர் நிரப்பி வைக்கப்பட்ட வாளியில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மல்லிகைத் தீவு கிராம அலுவலர் பிரிவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் உதயதர்சன் தர்வினா என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமி அயலில் இருந்த தாயாரின் சகோதரி வீட்டுக்கு விளையாடச் செல்வது வழமையாக இருந்துள்ளது. அவ்வாறு கடந்த ஞாயிறு அன்றும் விளையாடச் சென்றபோதே அங்கு நீர் நிரப்பி வைக்கப்பட்டிருந்த வாளியில் விழுந்து எவரும் அவதானிக்காத நிலையில் இறந்துள்ளார். இக்குழந்தை பெற்றோருக்கு ஒரே ஒரு பிள்ளை என்பது குறிப்பிடத்தக்கது. (ந-115)

## கொரோனா கட்டுப்பாட்டு திட்டத்துக்கு ஆதரவளியுங்கள்

### அமைச்சர் பவித்திரா கோரிக்கை



கொழும்பு, ஜன.14

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு முறையான சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி அரசாங்கத்தின் கொரோனாக் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கு ஆதரவளிக்குமாறு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். சுகாதார அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு புதிய வருடத்தில் எதிர்வரும் ஆறு மாத காலத்துக்கு அனைத்து இலங்கையர்களும் பெரும் தியாகங்களைச் செய்ய வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (வ-இ)

# வடக்கு, கிழக்கு அபிவிருத்தியில் இந்தியா அதிக கவனம் செலுத்தும்

## இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவிப்பு



**கொழும்பு, ஜன.14**
**வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தின் அபிவிருத்திப் பணிகளில் அதிகூடிய கவனத்தைச் செலுத்துவதற்கு இந்தியா எண்ணியுள்ளது என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் வசிக்கும் குடும்பங்களுக்காக 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் இந்தியாவின் பிரத்தியேக வீடமைப்புத் திட்டம் இலங்கையில் வரவேற்பைப் பெற்றுள்ளது. யாழ்ப்பாண கலாசார மையம் மற்றும் ஹற்றன் டிக்கோயாவில் மருத்துவமனை ஆகியவை இந்தியாவின் நிதியுதவியுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் நிதிக்கடன் திட்டத்தினூடாக வடக்கு மாகாணத்துக்கான ரயில் பாதைகள் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன. காங்கேசன்துறை துறைமுகம், பலாலி விமானநிலையம் ஆகியவற்றை புனர்நிர்மாணம் செய்யும் பணிகள் இந்திய நிதியைக்கொண்டு நடைபெற்றுவருகின்றன. கொரோனாவுக்கு பின்னரான பொருளாதாரத்தை மீட்டெடுக்க இலங்கைக்கு நாம் தொடர்ந்தும் ஒத்துழைப்பை வழங்குவோம். கல்வி, திறன் விருத்தி, தொழிற்பயிற்சி, சுகாதாரம் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் எமது அதிகூடிய கவனத்தைச் செலுத்துவதற்கு எண்ணியுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)



முல்லைத்தீவு, நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் வருடந்தோறும் இடம்பெறும் தைத்திருநாளை முன்னிட்டு மரபு வழி விசேட பொங்கல் வழிபாடுகள் நேற்று நடைபெற்றன. (எ-246)

# பணியிலிருந்து நீக்கினால் ரூபா.25 இலட்சம் இழப்பீடு

## அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஜன.14
நியாயமற்ற ரீதியில் தொழிலாளர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டால் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையை 25 இலட்சம் ரூபா வரையில் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பாக தொழில் உறவுகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
தொழிலாளர்களின் தொழில் முடிவுறுத்தல் சட்ட ஏற்பாடுகளுக்கமைய, தொழிலாளர்களின் சேவையை முடிவுறுத்தும்போது அவர்களுக்கு செலுத்த வேண்டிய நட்டஈட்டுத் தொகையை தீர்மானிப்பதற்கான சூத்திரமொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.
தொழிலாளர்கள் பணிபுரிந்த காலத்தை கருத்திற்கொண்டு இந்தத் தொகை தீர்மானிக்கப்படவுள்ளது.
தற்போது உயர்ந்தபட்ச நட்டஈட்டுத் தொகையாக 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபா உள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# தடுப்பு மருந்தை வழங்கி உதவுக

## சீனாவிடம் ஜனாதிபதி கோரிக்கை

கொழும்பு, ஜன.14
கொரோனா வைரஸ் தொற்றுக்கான தடுப்பு மருந்தை வழங்கி உதவுமாறு கோரும் கடிதமொன்றை, ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச சீன ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளார்
சீனாவுக்கான புதிய இலங்கை தூதுவர் பாலித கோஹண, சீனாவின் வெளிவிவகார அமைச்சு அதிகாரியொருவரை சந்தித்த வேளை, இக் கடிதத்தை வழங்கியுள்ளார்.
அத்துடன், இலங்கையின் தற்போதைய பொருளாதார அரசியல் நிலவரம் மற்றும் சீனாவில் முன்னுரிமைகள் குறித்து தெளிவுபடுத்தியுள்ள இலங்கைத் தூதுவர் ஜனாதிபதியிடமிருந்து சீன ஜனாதிபதிக்கு விசேட பரிசொன்றையும் வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# டெங்குக் களத்தடுப்பு உத்தியோகத்தர் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன.14
வடக்கு மாகாண டெங்குக் களத்தடுப்பு உத்தியோகத்தர்கள் நேற்று வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். காலை 9 மணி முதல் 10 மணிவரை இந்தப் போராட்டம் நடைபெற்றது.
வடக்கு மாகாணத்தில் தற்போது 85க்கும் மேற்பட்டவர்கள் களத்தடுப்பு உத்தியோகத்தர்களாகப் பணியாற்றுகின்றனர். ஆனால் அவர்களுக்கு இன்னமும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று கோரியே கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. தங்களது கோரிக்கை அடங்கிய கடிதத்தை ஆளுநரின் செயலரிடம் அவர்கள் கையளித்தனர். (எ-25,20)

# சு.கவின் தலைவராக மைத்திரி பதவி வகிப்பது சட்டவிரோதம்

## சந்திரிகா குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன.14
ஜனாதிபதியின் தீர்மானம் அரசமைப்புக்கு விரோதமானது என்று உச்சநீதிமன்றம் அறிவித்தும், ஜனாதிபதியின் ஆசனத்தில் அமர்ந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தொடர்ந்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகப் பதவி வகிப்பது சட்டவிரோதமானது என்று அந்தக் கட்சியின் போஷகரான சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அவர் காட்டமான கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.
அந்தக் கடிதத்தில் தான் தொடர்ந்தும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்தான், கட்சியின் மத்திய செயற்குழு அங்கத்தவர்தான் என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ப)

# தைப்பொங்கலை முன்னிட்டு ஆலயங்களுக்கு நிதி உதவி

கொழும்பு, ஜன.14
பின்தங்கிய மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 100 இந்து ஆலயங்களுக்கு தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு 10 ஆயிரம் ரூபா மதிப்பிலான காசோலைகள் வழங்கும் நிகழ்வு நேற்றையதினம் அலரி மாளிகையில் இடம்பெற்றது.
புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் எண்ணக்கருவுக்கு அமைய இந்த காசோலைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. காசோலை வழங்கும் நடவடிக்கை மாவட்ட ரீதியில் முன்னெடுக்கப்படும். (ந-இ)



# கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சர்வதேசத்தில் கிடைத்த அங்கீகாரம்

கொழும்பு,ஜன.14
உலகில் உள்ள விமான நிலையங்களில், கட்டுநாயக்க விமான நிலையமும் சுகாதார விதிமுறைகளைப் பேணும் விமான நிலையமாக, சர்வதேச விமான சேவை கவுன்சிலால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
உலகிலுள்ள ஆயிரத்து 200 விமான நிலையங்களில் 197 விமான நிலையங்களை, கொரோனா ஆபத்து காலப்பகுதியிலும் மிகவும் பாதுகாப்பான விமான நிலையங்களாகத் தேர்வு செய்துள்ளது சர்வதேச விமான நிலைய கவுன்சில்.
அதற்கமைவாக சர்வதேச விமான நிலைய கவுன்சில் (ஐ.ஓ.சி) கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரநிலைச் சான்றிதழை வெளியிட்டுள்ளது.
தூய்மை, கிருமி நீக்கம், தொலைநிலை, பணியாளர் பாதுகாப்பு மற்றும் பயணிகளின் தேவைகள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டு, சான்றிதழ் வழங்கப்பட்டது.
விமான நிலையம் தொடர்பான தரநிலைச் சான்றிதழ், ஏற்றுமதி மேம்பாட்டு அமைச்சர் சானகவிடம் கையளிக்கப்பட்டது. (சு-இ)




கனேடிய அரசாங்கம் தைப்பொங்கலை முன்னிட்டு தமிழ் மொழியையும் தமிழர்களையும் பெருமைப்படுத்தும் வகையில் தமிழ்மொழியில் அஞ்சல் தலையொன்றை வெளியிட்டுள்ளது. (ச-இ)



# புதுக்குடியிருப்பு சந்தை மீண்டும் பழைய இடத்தில்

**முல்லைத்தீவு, ஜன.14**
**முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் பொது விளையாட்டு மைதானத்தில் தற்காலிகமாக இயங்கிய பிரதேச பொதுச் சந்தையை மீண்டும் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

பிரதேசத்தில் கொரோனாத் தொற்றாளர் இருவர் அடையாளம் காணப்பட்ட நிலையில், சந்தை வியாபாரிகள் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டு, சந்தையின் வியாபார நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன. அதைத் தொடர்ந்து சந்தை பிரதேச சபையின் பொது விளையாட்டு மைதானத்தில் தற்காலிகமாக இயங்கியது.
தற்போது பெய்துவரும் மழை காரணமாக விளையாட்டு மைதானத்தில் வெள்ளம் நிரம்பிக் காணப்படுவதால் சந்தையை வேறு இடத்துக்கு மாற்றம் செய்து தருமாறு வியாபாரிகள் கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பிரதேச வணிகர் கழகத் தலைவர், வடக்கு மாகாண ஆளுநருடன் தொடர்பு கொண்டு, வியாபாரிகளின் நிலைமையை விளக்கினார். இதனை அடுத்து மீண்டும் சந்தையை அதன் பழைய இடத்தில் நடத்த ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-19)

# திருநெல்வேலியில் களைகட்டிய பொங்கல் வியாபாரம்

யாழ்ப்பாணம், ஜன.14
யாழ்ப்பாணம் திருநெல்வேலி சந்தையை அண்டிய பகுதிகளில் தைப்பொங்கல் பண்டிகைக்கான வியாபாரம் நேற்றுக் காலை களைகட்டிக் காணப்பட்டன.
கொரோனா நிலைமைகளை கருத்தில் கொண்டு வடக்கில் சந்தைகள் மூடப்பட்டுள்ள நிலையிலும் திருநெல்வேலி சந்தையை அண்டிய பகுதிகளில் பொங்கல் வியாபாரம் களை கட்டியது.
மண் பானை 350 ரூபாவிலிருந்தும், இஞ்சி, மஞ்சள் இலை 20 ரூபாவிலிருந்தும், கரும்பு 100 ரூபாவிலிருந்தும் விற்பனை செய்யப்பட்டன.
பொலிஸார் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கண்காணிப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர். (ச-7)



# நாட்டில் முதல் தடுப்பூசி சுவசெரிய பணியாளருக்கு

கொழும்பு, ஜன.14
நாட்டில் கொரோனாத் தடுப்பூசியை ஏற்றும் முதலாவது தரப்பினராக சுவசெரிய அம்புலன்ஸ் அலுவலக உத்தியோகத்தர்கள் தீர்மானிக்கப் பட்டுள்ளனர்.
கொரோனாத் தொற்றை ஒழிக்கும் செயற்பாட்டில் சுவசெரிய அம்புலன்ஸ் அலுவலக உத்தியோகத்தர்கள் முன்னின்று செயற்படுகின்றனர் என ஆரம்ப சுகாதார பராமரிப்பு, தொற்றுநோய் மற்றும் கொவிட்19 நோய் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர், விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். 297 அம்புலன்ஸ் வண்டிகளைக் கொண்ட சுவசெரிய சேவையில் ஆயிரத்து 399 ஊழியர்கள் கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)



தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் வருடாந்த பட்டமளிப்பு விழா, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதன் போது, பிரதமர் மஹிந்த ராஜபக்சவால், 50 பட்டதாரிகளுக்கு பட்டமளிக்கப்பட்டது. (க)

# சிறையில் அடைத்தாலும் தொடர்ந்து போராடுவேன்

## ரஞ்சன் ராமநாயக்க சபதம்

கொழும்பு, ஜன.14
சிறைக்குச் சென்றாலும் தன்னுடைய சரித்திரம் இத்தோடு முடிவடையப்போவதில்லை என, நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார். உயர்நீதிமன்ற வளாகத்திலிருந்து, சிறைச்சாலை பேருந்துக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது, அங்கு குழுமியிருந்த ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கைச் சரித்திரத்தையும் அவர் தன்னோடு ஒப்பிட்டு சுட்டிக்காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)



# கசிப்பு வைத்திருந்தாரென ஒருவர் கைது

கொடிகாமம், ஜன.14
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எருவன் பகுதியில் 750 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கொடிகாமம் பொலிஸாரால் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.
மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் குறித்த நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனத் தெரிவித்தனர். (ந-159)

# ரஞ்சன் ராமநாயக்க கைது அரசின் சிவப்பு எச்சரிக்கை

## உலபன்னே சுமங்கல தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.14
நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை கைது செய்ததன் ஊடாக அரசாங்கத்துக்கு எதிராக செயற்படுபவர்களுக்கு அரசாங்கம் சிவப்பு எச்சரிக்கையை விடுத்துள்ளது என உலபன்னே சுமங்கல தேரர் தெரிவித்தார். ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
கொலைக் குற்றம் சுமத்தப்பட்ட பிள்ளையான், சட்டத்தின் ஊடாகவே விடுதலையாக சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. பிள்ளையானுக்கு பிணை வழங்குவதற்கு முன்னரே ஆதரவாளர்கள் பட்டாசு மற்றும் மலர் மாலைகளுடன் வரவேற்கத்தயாராக இருந்தனர். இது எமது நாட்டின் சட்டம் தொடர்பில் எமக்கு இருக்கும் பெரும் பிரச்சினையாகும். ரஞ்சன் ராமநாயக்கவின் சில நடவடிக்கைகளை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். என்றாலும் அவர் நீதி நியாயத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# எல்லை மீறினார் ரஞ்சன் அதனாலேயே சிறைவாசம்

## சமல் ராஜபக்ச தெரிவிப்பு



கொழும்பு, ஜன.14
ரஞ்சன் ராமநாயக்க எல்லை மீறிச் செயற்பட்டதாலேயே அவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு நீதிமன்றத்தை அவமதிக்க முடியாது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பொறுப்பு,கடமை, மற்றும் எல்லை தொடர்பில் புரிதலோடு செயற்படுவது மிகவும் அவசியம். 35 வருடமாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் நான், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நீதிமன்ற நடவடிக்கைகளில் அநாவசியமாக தலையிட்டதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# கொரோனாவுடன் ஒரு பொங்கல்




உழவர் திருநாளாம்
தைத் திருமகளே வருக வருக
உலகம் உய்ந்திட
உயர்த்திடுவாய் வாழ்வினை
உற்சாகத்துடன் அறுவடை
செய்த நெல்லரிசிகொண்டு
உனக்கும் சூரியனுக்கும்
பொங்கலிடுகின்றோமின்று

பொங்கலோ பொங்கலென்று
பொங்கிப் படைக்கின்றோம்
பொங்கல் பொங்கிட பொசிங்கிட
வேண்டும் கொரோனா
பொலிந்திட வாழ்வு கனிந்திட
கனவு தைத்திருநாளிலே
பொங்கிடவேண்டும் உழவர் வாழ்வும்
உயிர்கள் வாழ்வதும்

கொரோனாவுக்கு
அஞ்சியிருந்திடாமல்
பேணிடுவோம் பண்பாடு
கொரோனா அணுகாமல் சுகாதார
வழிவகைகளை நாம் பேணிடுவோம்
கொண்டாடுவோம் தைத் திருநாளினை
இடைவெளிவி பேணி
கொணர்ந்திடுவோம்
தூகலத்தை முகக்கவசத்துடனே.

தெல்லியூர் தேவி.

KL
KIRUBA LEARNERS
கிருபா
KIRUBA LEARNERS
லேணர்ஸ்
Govt.Approved A Grade Driving Trainig School

No. 1 Driving Training School
In North

தலைமைக் காரியாலயம்
இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 071 4546 960
0777225292
DS.589 அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதிப் பயிற்சிப்பாடசாலை




அனைவருக்கும்
இனிய தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்



- ★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- ★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
- ★ இரவு நேர வாகனப் பயிற்சி.
- ★ எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- ★ தவணை முறைக் கட்டணங்கள்.
- ★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- ★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்

கிளைக் காரியாலயங்கள்:

யாழ்ப்பாணம்
227/6, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். (மதவடி அருகில்)
021 224 2022, 071 4546 956

முதலாம் கட்டைச் சந்தி, பருத்தித்துறை.
021 492 3201, 071 4546 961

36, கச்சேரி நல்லூர் வீதி, (கச்சேரி அருகில்) யாழ்ப்பாணம்.
021 222 6699, 076 722 5292

ஓம்பிளாசா, பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்.
021 222 6688, 071 777 6969

கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பளைச் சந்தி, தெல்லிப்பளை.
021 224 3737, 071 4546 959

கண்டி வீதி, சாகவச்சேரி. (நீதிமன்றம் அருகில்)
021 227 0700, 071 4546 957

பிரதான வீதி, (பொலிஸ் நிலையம் முன்பாக), நெல்லியடி.
021 300 6550, 071 4546 958

182, சேர் பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி
021 221 4488, 0777 227 740

காரைநகர் பிரதான வீதி, சித்தங்கேணி.
021 225 2500, 076 212 1299

வவுனியா
216, ஏ9, வவுனியா. (வசந்தி திரையரங்கு முன்பாக)
024 222 7777, 0777 100 444

மன்னார்
94, பிரதான வீதி, மன்னார்.
023 225 1656, 077 847 2732

கிளிநொச்சி
ஏ9 வீதி, கிளிநொச்சி. (கச்சேரி முன்பாக)
021 228 5505, 071 454 6955

புளியடிச்சந்தி, [illegible] வீதி, விசுவமடு
021 320 1515, 077 8585 263

நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி, முழங்காவில்.
021 300 8544, 070 333 6161

வாடிபாடி சந்தி, புதுகுடி.
021 320 [illegible]

## தைப்பொங்கல் சக்தியைப் பெருக்கி பேறறிவை மலரச் செய்யட்டும்



ஒவ்வொரு மனிதனுடனும், அறிவுச் சக்தி உண்டு. நோய்களையும் கவலைகளையும், குணப்படுத்தும் சக்தி உண்டு. ஆனால் இன்றைய காலத்தில் மனிதனுடைய விழிப்பு சக்தி குறைந்து விட்டது. அருள்நிலை குறைந்து விட்டது. ஆகவே மக்கள் விழிப்பு சக்தியைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். நல்ல ஒழுக்கங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஆணும் பெண்ணும் பாலியல் ஒழுக்க நிலையில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஒழுக்கம் நிறைந்த ஆண்மீக சக்தி, நெறிகளையும் தர்ம நெறிகளைப் பரப்பும் நூல்களைப் படித்து செயல்பட வேண்டும். ஒட்டு மொத்தத்தில் சான்றோர்கள் சமுதாயம் மீண்டும் நாட்டில் துளிர்க்க வேண்டும்.

இறைவன் முன் எல்லோரும் சமம். இந்த உலகமே கடவுள் மயம் என்று சொல்லலாம். தாழ்ந்த ஜாதி, உயர்ந்த ஜாதி என்று கிடையாது. இந்தப் பெர்ங்கல் எல்லா மக்களின் சக்தியைப் பெருக்கி பேரறிவை மலரச் செய்து உயர்ந்தோங்கி வாழும் விதத்தில் செயல்படவேண்டும். சூதும் வாதும் சூழ்ச்சிகளும் மறைந்து, பெரும் கருணையோடு, பேரன்போடு, சத்தியத்தோடு, நியாயத்தோடு இந்த உலகை வாழ வைக்க வேண்டும். அப்படி வாழ்ந்தால் திருவருள் கிடைக்கும். அனைவரும் பெற்றோரை மதிக்க வேண்டும். அம்மாவிடம் காட்டும் பாசத்தை மனைவியிடமும் மற்ற பெண்களிடமும் காட்ட வேண்டும். பிறரிடம் அன்பாக இருக்க வேண்டும். அறிவாக இருக்க வேண்டும். நீ செய்யும் தீவினைகள் அனைத்தும் உன் வீட்டை இடிக்கும். நல்வினை செய்யச் செய்ய கடவுளின் ஆசி கிடைக்கும். அன்பே உன் உயிராகவும் அமைதியே உன் காதலாகவும், பேரறிவே உன் நண்பனாகவும் , சத்குருவே உன் தலைவனாகவும் இருக்கட்டும்.

**சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணி தேசிகர்**
இந்து மத குரு பீடாதிபதி.

## சிறையில் உள்ளோரை விடுதலை செய்யுங்கள்



பொங்கல் விழா தமிழ் மக்களின் நன்றியின் பெருவிழா. நம்மைத் தாங்கும் நிலம் நமக்குத் தருகின்ற அனைத்துப் பயன்களுக்கும் நன்றி சொல்லும் விழா. முதல் விளைச்சலை இறைவனுக்கும் இயற்கைக்கும் காணிக்கையாக்கும் விழா.

நன்றி கூறும் பண்பு அனைத்து மனிதருக்கும் மிகவும் தேவையான ஒன்று. நம்மை படைத்த இறைவன், நம்மோடு வாழும் அயலவர், நம்மைக் காக்கும் இயற்கை ஆகிய மூவர்க்கும் நாம் என்றுமே நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். அனேகமான வேளைகளில் நாம் நன்றி கூறவும், நன்றியாக இருக்கவும் மறந்து விடுகின்றோம். இது அவர்கள் பணி, இது அவர்கள் கடமை என்கின்ற மனப்பாங்கே நம்மில் மேலோங்கி இருக்கின்றது. நன்றி என்ற வார்த்தையை இனிவருங்காலத்தில் அதிகம் பாவிக்கத் தொடங்குவோம்.

கொறோனா தொற்று நோயின் மத்தியிலும் இந்த தமிழ் மக்களின் நன்றியின் விழாவை மகிழ்வோடு கொண்டாடுங்கள். இந்து பொங்கல் விழா எல்லார் மனதுகளுக்கும் அமைதியையும் மகிழ்வையும் தரட்டும்.

போர் முடிந்ததின் பயனையும் மகிழ்வையும், அரசியல் கைதிகள் இன்னும் அனுபவிக்க முடியாமல் உள்ளமை கொடூரமானது. அவர்களை இன்னும் சிறையில்; வைத்திருப்பதால் இனி எதையும் சாதிக்க முடியாது. உடன்விடுதலை செய்யுங்கள். இறந்தவர்களை உயிர்ப்பிக்க முடியாது, காணாமல் ஆக்கப்பட்டோர் உயிருடன் இருப்பின் அவர்களை உடன் விடுதலை செய்யுங்கள். இந்த இரண்டு விடயத்திற்கும் இனியும் காலம் கடத்தாது உடன் முடிவு காணுங்கள் என அரசிற்கு தமிழ் மக்களின் பெயரால் அவசரமான அன்பு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

**மேதகு கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை**
யாழ் ஆயர்

## இன்னல்கள் விலகி இம்பம் பொங்கட்டும்

உழவர் திருநாளாம் தைப் பொங்கல் அனைவருக்கும் மகிழ்வான துன்பங்கள் அற்ற சுகமான வாழ்வைத் தர வேண்டும் என்பதை எமக்கு கடந்தகாலம் நன்கு கற்றுத் தந்திருக்கிறது. புலன்வழி செல்லவிடாது நல்லவைகளை செய்வதும் சிந்திப்பதும் உமக்கு மாத்திரமல்லாது எம்மைச் சூழ உள்ளவர்களுக்கும் மகிழ்வையும் சுபீட்சத்தையும் தருவதாக அமையும்.

சகல மக்களதும் துன்ப துயரங்கள் எல்லாம் மறைந்து மகிழ்வும் உயர்வும் கிடைக்க எல்லாம் வல்ல ஞான பீடத்தில் சரஸ்வதி அம்பாள் திருவருள் துணை நிற்க பிரார்த்திக்ன்றேன்.

சிவஸ்ரீ சபா வாசுதேவ குருக்கள்
குரு முதல்வர்

## அந்தியை எதிர்க்கும் ஆற்றலை பெற திடசங்கற்பம் பூணுவோம்

இன்று எமக்கு வேண்டியது பொருளும் புகழுமல்ல. நீதிக்காகக் குரல்கொடுக்கும் சாதனங்களின் குரல் வளையை நசுக்கும்போது அதற்கெதிராகக் குரல் கொடுப்பதற்கான திராணியே.

இந்த நாளில் அனைவர்க்கும் எமது தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். தைபிறந்தால் வழிபிறக்கும் என்பது தமிழர்தம் ஆண்டாண்டுகால நம்பிக்கை. இது நிஜமாகவேண்டுமானால் பொய்மையை விடுத்துப் பொழுதினைப்பெருக்க வேண்டும்.

எமது அருளாளர்கள் "நாமார்க்கும் குடியல்லோம்" என அரசையே எதிர்த்தார்களே, அநீதியிழைத்த பாண்டிய மன்னனிடம் நீதிகேட்டு மதுரையையே அழித்தாளே கண்ணகி இதுவே நம்மவருக்கு இருக்கவேண்டியது.

**ஈசான சிவ சக்திகிரீவன்**
தலைவர்
இந்து சமயப் பேரவை யாழ்ப்பாணம்

## பார்போற்றும் உன்னத நாள் தைப்பொங்கல்

தமிழர் வாழ்வியலில் நன்றி அறிதலையும்,பிறருக்கு கொடுத்து உண்ணும், பழக்கத்தையும் கொண்டு இயற்கையையும் ,இறைவனையும் போற்றும் திருநாள் தைத்திருநாள் ஆகும். பாடுபட்டு உழைத்த உழவனது தொழிலை பார்போற்றும் உன்னத நன்னாள் ஆகும். எவ்வளவு துன்பம் இருந்தாலும் அதையெல்லாம் புறந்தள்ளி புதுப்பானையில் சர்க்கரையும்,பாலும்,அரிசியும் கொண்டு இத்தினத்தில் பொங்கலோ பொங்கல் என்ற மங்கல நாதத்தை அகிலம் பரவ செய்யும் கைங்கரியம் தனி சிறப்பாகும்.

எமக்கான விடியல் தூரத்தில் இல்லை .நம்பிக்கை கொள்ளுங்கள் .அனைத்து உலக மக்களின் இயல்பு வாழ்வு சுபீட்சமாக அமைய வேண்டி அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து நிறைவான நல்வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் மகிழ்வுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

*இந்து குருமார் அமைப்பு*

## பொங்கும் மங்களம் எங்கும் தங்கட்டும்

இன்று தைப் பொங்கல் திருநாள். இந்த நல்லநாளில் எல்லோரும் சுகமே வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல காத்தற் கடவுளாய் விளங்கும் வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாளை வணங்கி வாழ்த்துகின்றோம்.

கொரோனாவின் தாக்கம் அறவே நீங்கப் பெற்று தை பிறந்தால் வழி பிறக்கும் என்றபடி "பொங்கும் மங்களம் எங்கும் தங்கட்டும் யாவரும் நலமே இருக்க இறையருள் கிட்டட்டும் என்று பிராத்தித்து நிற்கின்றோம்.

பிறந்துள்ள இந்த 2021ஆம் ஆண்டில் வருகின்ற முதல் பண்டிகை தைப்பொங்கல் ஆகும்.

ஆதலினால் இந்தத் தை முதலாக தழிழ்மக்கள் அனைவருமே ஆனந்தம் நிறைந்த மங்கள வாழ்வில் திளைத்திருக்க வேண்டுமென்று உளமார வாழ்த்துகின்றோம்.

**கலாபூஷணம்**
**இராசையா ஸ்ரீதரன்**



## அரசியல் கைதிகளின் விடுதலைக்கு இதய பூர்வமாகப் பிரார்த்தியுங்கள்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே எழுந்த திருக்குறளில் 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்" என வள்ளுவர் உழவர் பெருமக்களைச் சிறப்பாகப் போற்றுகிறார். தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் எம் சந்ததியினர் தவறாது பொங்கலைக் கொண்டாடுவது பெருமைக்குரிய விடயமாகும். தங்கள் மண்ணில் முற்றத்தில் பொங்கிப் படைக்கும் பண்பாடு பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற பழக்க வழக்கம் சற்று அருகி வருவதை எம்மால் உணரமுடிகிறது. தைப்பொங்கல் திருநாளை மரபு தவறாது, ஒழுங்கில் கொண்டாடுங்கள். எமது அடுத்த தலைமுறை இப் பண்டிகைப் பண்பாட்டை பாதுகாக்க உதவுங்கள்.

தைப்பொங்கல் திருநாளில் அனைவரும் தெய்வங்களை மன்றாடுங்கள். கொரோனா என்ற கொடிய நோயை பகலவனே கட்டுப்படுத்தி உயிர்களைக் காத்தருள வேண்டும் என பொங்கல் நாளில் பிரார்த்திப்போம்.

எப்போது விடுதலை கிடைக்கும் என சிறைக் கூடங்களில் ஏக்கத்துடன் காத்திருக்கும் எம்மவர்களின் விடுதலைக்காக அனைவரும் இதய பூர்வமாகப் பிரார்த்தியுங்கள்.

நோயாளர்கள் அனைவருக்கும் விமோசனம் கிடைக்க வேண்டும் என வேண்டுதல் செய்யுங்கள். எங்கள் தமிழினம் உய்வு பெறுவதற்கு தலைவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் செயற்பட இந்நாளில் வேண்டுவோம். அன்பு உள்ளங்களே உங்கள் அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கலாநிதி ஆறு திருமுருகன்**
**தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை**

## நன்றியுணர்வை தெரிவிக்கும் திருநாளாம் தைப்பொங்கல்



தமிழர்களினால் கொண்டாடப்படும் பண்டிகைகளில் தலைசிறந்ததாகவும், உயர்வானதாகவும் தைப்பொங்கல் பண்டிகை போற்றப்படுகின்றது. தமது உழைப்புக்கு உதவிய இயற்கைக்கு நன்றியுணர்வைத் தெரிவிக்கும் திருநாளாக தைப்பொங்கல் விளங்குகின்றது.

இயற்கையின் பெறுமதி சமத்துவத்திற்கு மதிப்பளிக்க வேண்டியதன் முக்கியத்துவம், நன்றி தெரிவிக்கும் உயரிய பண்பு போன்ற அனைத்து மதங்களினதும் மனித நேயக்கருத்துக்களை தைப்பொங்கல் பண்டிகை எமக்கு எடுத்தியம்புகின்றது.

மக்கள் அனைவரதும் எதிர்கால வாழ்வில் சகல எதிர்பார்ப்புகளும் நிறைவேறி சாந்தியும், சமாதானத்துடனும், சௌபாக்கியத்துடனும் வாழ எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றேன். இந்த மகிழ்ச்சியான நன்நாளில் தைப்பொங்கல் பண்டிகையை கொண்டாடிடும் சகோதர தமிழ் மக்களுக்கு எனது உளப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மஹிந்த ராஜபக்ச**
பிரதமர்

## தை பிறந்தால் நம்மை நாம் ஆள வழிபிறக்கும்



இலங்கையில் தமிழர் தேசத்தில் தமிழ் மக்கள் விடுதலை வேண்டி நடத்தும் போராட்டம் ஆயிரமாயிரமாய். தை பிறந்தால் நம்மை நாம் ஆள வழி பிறக்கும் என்று நம்பி தமிழர் திருநாள் பொங்கலைப் போற்றுவோம்.

புத்தரிசி எடுத்துப் பொங்கி நாட்டில் வாழும் மக்கள் இதயம் பொங்கிட அனைவரையும் வாழ்த்துவோம் வாழ்க. ஆனால் இன்று கொரோனா வைரஸ் நோய் தொற்றுடன் மக்கள் போராடவும் வாழவும் பழக வேண்டிய காலம். அந்த வகையில் பொங்கலுக்கு கொரோனா தடை விதிக்கிறது! அச்சுறுத்தி நிற்கின்ற கொடுமை நிகழ்கின்றது. தமிழ்த் தேசத்தின் தமிழின் விடுதலைக்காய் வித்துடல்களை விதைத்த எம் தமிழ் உறவுகளை நினைவிடங்களில் நினைவு கூர தடுத்து நிறுத்தும் அரச தரப்பு அந்த நினைவிடங்களை, தமிழர் பாரம்பரிய வாழ்விடங்களை, பௌத்த சிங்கள பேராண்மைச் சித்தாந்தத்தால் அழித்து விடும் நடவடிக்கைகள் தொடர்கின்றன. அவற்றில் ஒன்றுதான் யாழ். பல்கலையில் தை ஏழாம் நாள் இரவு நடைபெற்றது. கல்வியில் உயரும் தமிழ் மாணவர் போர் முனையில் நிற்கின்றனர். அந்த பல்கலை மாணவர் அர்ப்பணிப்பை இத் தைப் பொங்கல் காலத்திலும் வாழ்த்துகிறோம். தை பிறக்கிறது என்ற வேளை பாரதத்தின் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் வருகையும், சந்திப்பும் ஆறுதல் தரும் செய்தியாகும்.

தமிழ் உலகம் போராட்டக்களத்தில் நிற்கிறது. வளம் தரும் மழையும் கொட்டி நிற்கின்றது. வானம் தெரியுமோ? ஆதவன் உதிப்பது தெரியுமோ, தமிழர் தேசமும் வெள்ளக்காடானது எனவும் ஏக்கம்? தமிழர் உலகம் ஒன்றுபட்டுத் தமிழர் விடுதலைக்கும் விடிவுக்கும் செயலாற்றுகிறது. தை பிறந்தால் வழி பிறக்கும் என புத்தாண்டில் புதிய நம்பிக்கையும் பிறக்கிறது.

**மாவை.சோ.சேனாதிராசா**
தலைவர், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

## அரசியல் தீர்வை பெற்று வாழ வழிசமைப்போம்

தை பிறந்தால் வழி பிறக்கும் என்று நாம் காலம் காலமாக கூறி வந்தாலும் தமிழ் மக்களின் வாழ்வில் ஏற்பட்ட வலிகளுக்கும் வேதனைகளுக்கும் இன்று வரை வழி பிறக்கவே இல்லை.

இந்தத் தைத்திருநாள் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு ஒரு நல்ல திருப்பங்கள் நிறைந்த நாளாக அமைய வேண்டும். தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முப்பெரும் தலைவர்களால் உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி 1972 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் 'தமிழ் ஈழக்' கோரிக்கையை முன்வைத்தாலும், அதன் பின்னர் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைகளால் தனது கொள்கையைத் தளர்த்திக் கொண்டு, கடந்த 15 வருடங்களாக இந்திய முறையிலான ஒரு அரசியல் தீர்வை பெற்றுக்கொடுப்பதற்காக போராடிக் கொண்டு வருகின்றது.

இந்தத் தைத்திருநாளில் இந்திய முறையிலான ஒரு அரசியல் தீர்வை பெற்றுக் கொடுத்து எமது தமிழ் மக்களை நிம்மதியாகவும், சுபீட்சமாகவும் வாழ வழிசமைத்துக் கொடுப்போம் என்று சபதம் எடுப்போம்.

**வீ. ஆனந்தசங்கரி,**
செயலாளர் நாயகம்,
தமிழர் விடுதலைக் கூட்டணி

## தமிழராக வாழ்வதை பிரகடனம் செய்வோம்



கடந்த காலங்களில் பொங்கல் நாள்களில் எதிர்காலம் பற்றிய நம்பிக்கைகள் நிறைந்திருந்தன. 2009 மே 19 இல் எங்கள் விடுதலை பற்றிய கனவுகள், விடுதலைப் போர் தோற்கடிக்கப்பட்டது என்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒரு கசப்பான உண்மை தான். ஆனால் எமது போராட்டம் எமது வடிவத்தை மாற்றிக்கொண்டு தொடர்கிறது.

தனது உரிமைகள் கிட்டும் வரை உறுதி குன்றாது நிமிர்ந்து நிற்போம் என்பதை இன்றைய எமது கலாசார விழாவில் சங்கற்பம் செய்கிறோம். இது ஒரு களியாட்ட நாளல்ல, நாம் தமிழர் என்பதையும் நாம் தமிழராகவே வாழ்கிறோம் என்பதையும், என்றும் தமிழராகவே வாழ்வோம் என்பதையும் உலகுக்குப் பிரகடனம் செய்யும் புனித நாள் இது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்களை அரசு காலத்தை இழுத்தடிக்கும் ஒரு கருவியாகக் கையாண்டு வருகிறது. ஆனால் அரசின் இந்த ஏமாற்று மோசடி சர்வதேசத்தின் முன் அம்பலப்பட்டு நிற்கிறது. அரசின் போர்க் குற்றங்களும், மனித உரிமை மீறல்களும் அவற்றுக்கு பொறுப்புக்கூற மறுக்கும் கயமைத்தனமும் உலகின் கண்டனங்களுக்கு உள்ளாகவேண்டிய நிலைக்கு அரசைத் தள்ளியுள்ளது. அவற்றை எமது உரிமைப் போராட்டத்துக்கு சாதகமாக மாற்றுவது எமது உறுதி, ஐக்கியம்,தந்திரோபாயம் என்பவற்றிலேயே தங்கியுள்ளது. எனவே எமது உரிமைப் போரை இறுதி வெற்றிவரை உறுதியுடன் முன்னெடுப்போம் என இன்றைய புனித நாளில் உறுதி பூணுவோம்.

**ஈ.சரவணபவன்**
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், உதயன் பத்திரிகை நிர்வாக இயக்குநரும்.

## தொற்றுநோய் அபாயம் நீங்கி யாவரும் சுபிட்சமாக வாழவேண்டும்

தமிழ் மக்களின் பண்பாட்டை, பாரம்பரியத்தை, நன்றிகூறும் பண்பை வெளிப்படுத்தும் தனிப்பெரும் அடையாளமாகத் திகழ்வதே 'பொங்கல் விழா' ஆகும்.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற கூற்றுக்கமைய உலகெங்கும் பரந்துவாழும் தமிழ்மக்கள் யாவருக்கும் வாழ்வில் குறைவில்லாத நலமும் வளமும் புகழும் செல்வமும் பொங்கவேண்டும் என எல்லாம்வல்ல பரம்பொருளைப் பணிந்து - அன்புடன் பிரார்த்திப்பதுடன், எமது உளம் கனிந்த தைப் பொங்கல் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இந்தக் கொரோனாத் தொற்றுக் காலத்தில் அரசால் விடுக்கப்படுகின்ற சுகாதார வழிகாட்டல்களை நாம் ஒவ்வொருவரும் முறையாகக் கடைப்பிடிக்கவேண்டும்.

மிக விரைவில் இந்த தொற்றுநோய் அபாயம் நீங்கி உலகமக்கள் யாவரும் சுபிட்சமாக வாழ அருள்செய்ய வேண்டி எல்லாம் வல்ல பரம்பொருளின் பாதாரவிந்தங்களைப் பணிந்து பிரார்த்திப்பதுடன் தைப் பொங்கல் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.



**வே.கந்தசாமி**
பொதுச் செயலாளர்
அகில இலங்கை
இந்து மாமன்றம்

## வாழ்க்கையில் மகிழ்ச்சி தரும் பொங்கலாக அமையட்டும்

தமிழ் மக்கள் வாழ்க்கையில் அமைதியும் செழிப்பும் மற்றும் மகிழ்ச்சியும் பொங்க இந் நன்நாளில் உங்கள் ஒவ்வொருவரையும் மற்றும் உங்கள் குடும்பத்தாரையும் வாழ்த்தி நிற்பதோடு கடவுள் உங்களுக்கு ஆசிவழங்க வேண்டிநிற்கின்றேன்.

பல்வேறு பிரச்சனைகள் நம்மை சூழ்ந்து வந்தாலும் இந்த பொங்கல் நம் வாழ்க்கையில்
மகிழ்ச்சியைத் தரும் என நான் நம்புகிறேன்.

இனி வரும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மகிழ்ச்சி உங்கள் உள்ளங்களிலும் இல்லங்களிலும் நிரம்பி வழியட்டும். கடவுள் மூலமாக நிம்மதி, சுபீட்சமான வாழ்வு ஒவ்வொருவருக்கும் கிடைக்க வேண்டும் என்று அனைவருக்கும் பொதுவான இறைவனை வேண்டி அனைத்து தமிழ் மக்களுக்கும் எனது இனிய பொங்கல் திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாடாளுமன்ற உறுப்பினர்
**செல்வம் அடைக்கலநாதன்**

## மலர்கின்ற புதிய தைத்திருநாள் நம்பிக்கையை தரவேண்டும்

உலகம் முழுவதும் தொற்றுநோய் அபாயம் தொடர்பாக உச்ச அளவிலான அச்ச நிலைமையொன்று நிலவுகின்ற சூழலில் புதிய தைத்திருநாள் மலர்கின்றது.

தை பிறந்தால் வழிபிறக்கும் என்பது பாரம்பரியமான நம்பிக்கை. மலர்கின்ற புதிய தைத்திருநாள் உலகம் முழுவதற்கும் புதிய நம்பிக்கையையும் பலத்தையும் தரவேண்டும்
நோயற்ற சௌபாக்யமான வாழ்வைப் பரிசளிக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

இந்த நல்ல நாளில் உலகத்துக்கு உணவளிக்க பாடுபடுகின்ற உழவர்களுக்கும் நன்றியுடன் கூடிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்கின்றேன்.

**திருமதி.ஸ்ரான்லி டி மெல், மன்னார் மாவட்டச் செயலர்**



# தமிழ் மக்களின் நயத்தக்க நாகரிகமே தைப்பொங்கல்



மதுரகவி, காரை எம்.பி. அருளானந்தன்.

வருடத்திலே முதலாவது மாதம் தை மாதம். தை மாதம் முதல் திகதியை மகர சங்கராந்தி என்பர். உத்தராயணம் ஆரம்பிக்கும் நாளும் அதுவே. தென்திசையிலிருந்து வடக்கு நோக்கி சூரியன் திரும்புவதை உத்தராயணம் குறிக்கும். தைமுதல் ஆனி ஈறாகவுள்ள ஆறு மாதங்களைக் கொண்ட உத்தராயணம் புண்ணியகாலம் என்றும் சுபகருமங்கள், மங்கள காரியங்கள் திகழுகின்ற காலம் என்றும் கொள்ளப்படுகின்றது.

### நன்றிக்குரிய திருநாள்

உழைப்பின் உயர்வை, உழவர்களின் மேன்மையை மதிக்கும் விழாவாகவும் தைப்பொங்கல் விழா ஆதிகாலம் தொட்டு வழங்கி வருகிறது. மனித உழைப்பாளிகளுடன் விலங்கு உழைப்பாளிகளையும் நினைத்து நேசித்து நன்றி செலுத்தும் பெருநாளாகவும் தைப்பொங்கல் பண்டிகை விளங்குகின்றது.

### சூரியனுக்குரிய வழிபாடு

பொங்கல் திருநாளில் அதிகாலையில் மக்கள் நித்திரை விட்டு எழுந்து நீராடித் தம்மைத் தூய்மைப் படுத்திக் கொள்வர். வீட்டு முற்றத்தில் சாணத்தால் மெழுகிய நீள் சதுரமான பகுதியை வெள்ளை மற்றும் சிவப்பு நிறமாவால் அழகிய கோலமிட்டு மண்டபமாக வடிவமைத்துக் கொள்வர். வாழை, கமுகு, கரும்பு, மகர தோரணங்கள், மலர்கள் என்பனவற்றால் அலங்கரிப்பர். ஒதுக்கப்பட்ட அந்த இடத்துக்குள் ளும் அழகிய கோலங்களையும் கலைத்திறன் மிளிரப் போடுவர். பிள்ளையார் பிடித்து வைத்து, குத்து விளக்கு ஏற்றி பூரண கும்பம் வைத்து பழங்கள் வெற்றிலை பாக்கு தேங்காய் முதலிய மங்களப் பொருள்களை நிவேதிப்பர். விநாயகனை முதலில் நினைத்து இஷ்ட தெய்வங்களைப் பிரார்த்திப்பர். நீரினால் சுத்தம் செய்யப்பட்ட புதுப்பானையைத் திருவணையில் வைத்து அதன் வாய்ப் பானையை மஞ்சள் இலை, இஞ்சியிலை, மாவிலை ஆகியவற்றைப் பொருத்தக் கட்டி பானையின் மேற்புறத்தில் திருநீற்றைக் குழைத்து திரிபுண்டரமாக மூன்று இடங்களில் பூசி, சந்தனம், குங்குமம் திலகமிட்டு பானைக்குள் பசுப்பாலும் நீரும் விட்டு தீபத்தினால் அடுப்பில் நெருப்பை உண்டாக்கிப் பற்ற வைத்து கணவனும் மனைவியும் ஒருமித்த சிந்தையினரால் சூரியனை வணங்கி இஷ்ட தெய்வங்களை நினைத்து பானையைப் பக்குவமாய் இருவரும் தம் கைகளால் பற்றிப்பிடித்து தூக்கி அடுப்பில் ஏற்றுவர். இதில் குடும்பத்தவர் யாவரும் இணைந்து கொள்வர்.



### பொங்கலோ பொங்கல்

பானையில் பால் பொங்கி எழும்போது “பொங்கலோ பொங்கல்” என்று உரத்துக் கூவி மகிழ்வர். தம்முடைய வாழ்வில் இன்பம் பொங்கப் போவதை உணர்த்தும் அறிகுறியாகப் பால் பொங்கி ஓங்கி எழுதலைக் கண்டு அவர்களின் மனங்களும் பொங்குப் பூரிக்கும். பால் பொங்கு வடக்கு முகமாக வேனும் கிழக்கு முகமாக வேனும் ஈசானத்தை நோக்கியேனும் முதலில் சரிந்து வெளித் தள்ளினால் அதனை நன் நிமித்தமாகக் கருதிப் புளகாங்கிதம் கொள்வர் அதன் பின்னர் குடும்பத்தலைவர் புதுநெல்லில் குற்றியெடுத்த பச்சரியைத் தம் இரு கைகளாலும் அள்ளி சூரிய பகவானை வழிபட்ட வண்ணம். பானையின் வாய் விளிம்பினை மும்முறை சுற்றி பானையுள் இடுவார். தொடர்ந்து குடும்பத் தலைவர், குடும்பப் பெரியவர்கள், பிள்ளைகள் என்போர் அரிசியைப் பானையில் இடுவர். வெல்லம், கற்கண்டு நெய், தேன் கருப்பஞ்சாறு, திராட்சை முந்திரிப் பருப்பு பயற்றம் பருப்பு என்பனவற்றைப் பாலுடன் கலந்து பானையுள் விட்டு தித்திக்கும் இனிய பொங்கலை ஆக்குவர்.

பொங்கிய அமுதை மூன்று தலை வாழையிலைகளில் படைத்து பழங்கள், கரும்பு, செவ்விளநீர், மலர்கள் முதலியவற்றைக் கொண்டு மடைபரவி, தேங்காய் உடைத்து வைத்து, நீரும் மலரும் கொண்டு அர்ச்சித்து தூபதீபம் காட்டி பக்தி சிரத்தையோடு திருமுறைகளைப் பாராயணம் செய்து சூரிய பகவானை வணங்கி வழிபாடு செய்வர்.

### தை பிறந்தால் வழி பிறக்கும் எனும் நிஜமான நம்பிக்கை

பூமியிலே மழை அத்தியாவசியமாகத் தேவை. நீரின்றி இந்த உலகம் இயங்காது. மழையைத் தருவது சூரியன். வெப்பமும் ஒளியும் உயிர்ப்புச் சூரியனாலேயே அனைத்து ஜீவராசிகளுக்கும் வழங்கப்படுகிறது. இன்னார் இனியார், உயர்வு, தாழ்வு என்னும் பேதங்களின்றி ஒரேவிதமாக எல்லோருக்கும் அவற்றை வழங்கும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகத் தை முதல் நாளில் பொங்கல் விழா எடுத்து வருகின்றமை தமிழ் மக்களின் நயத்தக்க நாகரிகத்தையும் உயர் பண்பாட்டையும் வெளிப்படுத்துகின்றது.

ஆகவே தைப்பொங்கல் இன்ப் பொங்கலாக, இனிமைப் பொங்கலாக, மகிழ்ச்சிப் பொங்கலாக, சர்வமங்களப் பொங்கலாக அமைய வேண்டி இறைவனைப் பிரார்த்திப்போமாக. தமிழ் மக்கள் தமது இந்தப் பண்பாட்டு வைபவத்த காலந்தோறும் பேணவேண்டும் பண்டைத் தமிழரின் மூத்த வழிபாடாக இது அமைகிறது.








# தையெனும் வானமகள் வந்தாள்

அன்னையரின் கைவண்ணத் தழுதினிய பொங்கல்
அனைவருக்கும் பரிமாறும் நினைவுடனே எங்கும்
புன்னகையார் கைவளையல் மெல்லொலிகள் சிந்த
புதுமை நலம் பொங்கிடவே தைப்பாவை வந்தாள்

மரபுநெறி முறைகளையே மறந்த தமிழன்பர் தம்
மனங்களிலே மாற்றம் வர மன்பதைகள் எல்லாம்
தரணியிலே மனிதநெறி தாழாது வாழும்
தகமையுறு வாழ்வளிக்க தைமாது வந்தாள்

புதலத்தின் தட்ப வெப்ப தன்மையினால் அன்றோ
புகுந்தன வெவ்வேறான மொழி, பண்பாடு எல்லாம்
ஆதலினால் எம்தமிழர் வரன்முறைகள் யாவும்
அந்நியத்தில் கரைந்திடாது அறம் காக்க வந்தாள்

தீங்கனிகள் தித்திக்கும் தமிழ் மண்ணின் மாந்தர்
தேம்பியழும் குழந்தையென உறவிழந்து வாடும்
பாங்கினை இவ்வுலகோர்க்கு பறைசாற்ற வென்று
பைந்தமிழர் சிந்தை நிறை தைமங்கை வந்தாள்

ஆண்ட தமிழ்க் குடிமக்கள் அமைதியுடன் வாழ
அடிமை விலங்கொடிபட நல்லுரிமைகளினோடு
மீண்டுமொரு போர்க் கொடுமை வாராது காக்கும்
மேன்மையுறு தாயென நம் தைநங்கை வந்தாள்

புதுமையென அந்நியரின் வாழ்முறைகள் தம்மை
போற்றி இள மனங்கள் தம் சுயநிலையை விட்டு
மெதுமெதுவாய் விலங்குகளைப் போல் வாழ எண்ணும்
மேலையினோர் பண்புகெட வானமகள் வந்தாள்

உலகினையே அச்சுறுத்தி உயிரெடுக்கும் கொரோனா
ஒருபொழுதும் இனிவாரா உயர் தடுப்பு முறைமை
நலமுடனே உலகெங்கும் பரந்து உயிர்காக்கும்
நன்மைதர தையெனும் நாயகியாள் வந்தாள்

மாங்குயில்கள் கவிபாட மயில்கள் நடமாட
மாமலர்கள் இதழ்விரிக்க தேமதுர வெள்ளம்
தீங்குரலில் தித்திக்க திகழ் அழகு பொங்க
தெவிட்டாத இனிமையுடன் தீந்தமிழ் தை வந்தாள்.

ஆனையூர்க் கவிராயர்

## தைமகளே நலம் தருவாய்

பொங்கல் பொங்கி படைத்துப் பரிதியை
பொங்கும் நன்றி உணர்வுடன் வணங்கிடும்
பொங்கல் திருநாள் எங்கும் நலமே
பொங்கச் செய்வாய் தைத்திரு மகளே

கொரோனா ஒழிந்து குவலயம் வாழ
கொரோனா மறைந்து காசினி மகிழ
கொரோனா நீங்கி வையகம் உய்ய
கொரோனா நோயை அகற்றிடு வாயே

நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்.

## அத்(தை) மகளை எப்படி மறப்பது....?

தை பிறந்தால் வழி பிறக்கும் என்றவர்
முனிவர்கள் உண்மைதான்
அத்(தை) மகளை எப்படி மறப்பது ?
வாசலில் கோலம் போட்டு முறை கும்பம் வைத்து
வாஞ்சையோடு வணக்கம் சொல்லி வரவேற்ற
அத்தை மகள் இப்போ எம்மிடமில்லை
பிரிந்து இருக்கிறாள் என்பது தான் பெருந்துன்பம்
களி மண்ணை காதல் செய்து அடுப்பு பிடித்து
கருஞ்சாணம் மெழுகி குறிவைத்து
விருப்புடன் மண்பானையில்
இஞ்சி,மாவிலை கட்டி
விறகாக தென்னம் பாழையில் தீமூட்டி
பொறுப்புடன் வீட்டுத் தலைவன், தலைவி
பொங்கல் செய்து தையவளை வரவேற்கும்
பொழுதுகளில் அத்(தை) மகள் வருவாள்
கொண்டாட்டம் குதுகலமாகவேயிருக்கும்
குழந்தைகள் கூட பட்டாசு கொழுத்தி மகிழ்வர்
வாழையிலையில் படையல் செய்து
வாஞ்சையோடு கதிரவனை கூப்பிட்டு
படையல் காட்டி
வயலுழுது விதைத்தவனை எண்ணி
நன்றிசொல்லும்
நீள நினைக்கும் தைத்திருநாள் நினைவுகளை
நெஞ்சம் மறக்குமா அத் (தை) மகளை

தமிழானந்த பாரதி

## மலர்ந்திடும் தைப்பொங்கல் தந்திடுமே நிம்மதியை

தை பிறந்தால் வழி பிறக்குமெனும் முதுமொழிபோல்
தமிழுலகிலுமோ தனிச்சிறப்பு தைத்திருநாளாய்
தரணி எங்கணும் போற்றிடும் நன்னாளென பொங்கலோ
பொங்கலென பொங்கிடும் நாளுமிதுவே

தை பிறந்தே மலர்ந்த தைப்பொங்கலுமோ
தமிழர் திருநாளே தமிழ்ப் பெருநாளுமிதே
தரணியிலுமோ தமிழ்த்திருநாளின் புகழுடனாய்
தைத்திங்கள் தந்திட்ட நற்பொங்கல் நாளாகிடுமே

உழுதுண்டு வாழ்வோர்க்கும் உற்றநாளாய்
உழவர் திருநாளாகிடும் தைப்பொங்கலுமோ
கமம் செய்திட்டோரும் களிப்புறும் நன்னாளாய்
கதிரவனுக்கும் நன்றி நல்கிடும் நன்னாளுமிதுவே

தைப்பொங்கலெனும் தைத்திருநாளிதிலே
மக்கள் மனங்களிலும் மகிழ்ச்சி பொங்கிடவே
வளம் மிகு வாழ்வும் மனம் நிறைந்திடவே
மலர்ந்திடும் தைப்பொங்கல் தந்திடுமே நிம்மதியை

**தங்கத்தமிழன்**
காரைநகர்





# உழவன் புகழ்பாடுவோம்

விடியலுக்காய் காத்திருந்து
துண்டை இடுப்பில் கட்டி
ஏறு பூட்டி சேற்றில் மிதித்து
பட்டத்தில் விதை விதைத்து
வெய்யிலில் ஏர்பிடித்து
உச்சி வெய்யிலில் உரமிட்டு
அந்திசாய களைபிடுங்கி
மூன்று காலமும் முகம் சுளிக்காமல்
உழைப்பவன் உழவனே
உழைத்திட அஞ்சாதவனும் அவனே
காத்துக்கிடந்து காலமறிந்து
கதிரவனின் வரவு கண்டு
கதிர் அறுத்து காற்றில் தூத்தி
ஊரோடு சேர்ந்து
உண்ணும் உத்தமனும் அவனே
இத் தைத் திருநாளில்
இல்லத்தில் பொங்கல் பொங்க
உளம் மகிழ்ந்து உழவன்
புகழ் பாடுவோம்

**எஸ்.கலாமணி**
எட்டாம் வட்டாரம்
மண்டைதீவு

# பொங்கல் தமிழர்க்கு..

பேரிடராய்த் துன்பங்களால்
கொரோனா முடக்கிடினும்
தமிழர்க்குத் தனித் திருநாள்
மரபுநிலையின் மகத்தான நாள்
பாரிடமும் வெளியிடமும்
உழவர் முதல் நிலையினிலும்
தைப் பொங்கல் உழவர்களின்
மகிழ்ச்சிப் பொங்கலாள்

போர்ப்புல மறந்திடுதோ
நிலையழிக்கும் காலத்திலும்
பொங்கல் தமிழர்க்கு
புத்துணர்வூட்டும் உன்னதநாள்
வேரூன்றியும் விழுதுகளின்
எச்சத்தில் துளிர்த்து
தையவளுக்கு பொங்கிடுவோம்
புதுவழியொன்று பிறந்திடும்

அமிர்தராஜன் அன்ரனிபீரிஸ்
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்

# யாழ் சிமாட்டின்
## இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

01 நிமிடம் ஒதுக்குங்கள் வாழ்க்கையை ஆரோக்கியமாக்குங்கள்

தூய நீர் ஆரோக்கியத்தின் அடித்தளம்

**உங்கள் வீட்டு கிணற்று நீர்....**
உவர் தன்மையாகவோ, மலக்கிருமிகளை கொண்டதாகவோ, அளவுக்கு அதிகமான கல்சியம், அயன், மக்னீசியம் பொஸ்பரஸ் போன்ற இரசாயனங்களை கொண்டதாகவோ, கலங்கலாகவோ, மணம் கொண்டதாகவோ இருக்கலாம். அல்லது இரசாயன பசளை பாவனையால் நைதரசன் கழிவுகளால் குடிநீரும் இரசாயன கரைசலாகி இருக்கலாம்.

இலவச நீர் பரிசோதனையுடனும், மிகக் குறைந்த விலையிலும்,
அதிகபட்ச உத்தரவாதத்துடனும்,
எங்கும் பெறக்கூடிய உதிரிப்பாக வசதிகளோடும்,
வாழ்நாள் முழுவதும் பராமரிப்பு சேவைகளுடனும்
24 மணித்தியாலத்தினுள் முறைப்பாட்டு திருத்திக்கொடுத்தல்

கவலையை விடுங்கள் இதற்கான தீர்வாக நாங்கள்

**YARL SMART**
*Water solution (Pvt) Ltd*
***"Smart Water, Smart Life"***
341, KKS Road, Jaffna | 021 430 0044, 076 666 5267
yarlsmartwater@gmail.com | www.yarlsmartwater.com



## தமிழ் கொழிக்கும் தைப்பொங்கல்

தமிழ் கொழிக்கும்
தைப்பொங்கல்
தரணிக்கே எடுத் தியம்பும்
உமிழ்கின்ற உன்னதத்தால்
உலகென்றும் உவக்கிறது!

உழுதொழிலின் உயர் நிலையை
உலகத்திலுயர்த்தி நிற்கும்
பழுதற்ற பாங்கதனால்
பாரென்றும் பனிக்கிறது!

கல்வியெனும் கடலலையில்
கலந்தொளிர்ந்த கற்பகமாய்
வல்ல வழித் துணையாம்
வள மீயும் தைப்பொங்கல்!

தொல்லை துடைத்தழிக்க(த்)
தூய்மை துளிர்ந்தொளிர்(க்)
கல்வி எடுத்துலகில்
காரணியாய்க் கருத் துமிழ்வாய்!

கவிஞர் கலாபூஷணம்
சுஉத்தாடி வி.சி. குஞ்சிதபாதம்

## கொடிய கொரோனா போயகன்றிடப் பொங்கி மகிழ்வோம்

ஏர் பூட்டி உழுது பயிர் நாட்டி
கண் கண்ட தெய்வம் கதிரவனின் துணையாலே
உலகம் முழுவதற்கும் உணவளித்திடும்
உழைக்கும் வர்க்கத்தைப் போற்றுவோம்
கதிரவனுக்கு நன்றிக்கடன் செய்யும் பொன்னாள்
உழவர் திருநாள் மட்டுமல்ல
உறவினர் மகிழ்ந்திடும் திருநாள்
புதிய பானைதனில் அறுவடை நெல் அரிசியிட்டு
பால் சர்க்கரை பயறிட்டு
பொங்கி மகிழும் நன்நாள்
உறவினர்களுக்கு பொங்கல் கொடுத்து மகிழும் நன்நாள்
பண்டை பண்பாட்டு கலாசாரம் இன்றுவரை
தொடர்கிறது
கொடிய கொரோனா போய் அகன்றிடப்
பொங்கி மகிழ்வோம்

நயினை
விசு இராசநாயகம்.

## அவர்களுக்காய் பொங்க வரம் வேண்டும்

பள்ளிகொள்ளாதவாறு பலியெடுக்க நடந்த இடம்
முள்ளிவாய்க்கால் என்பதனாலே உள்நினைந்து
யாழ்ப்பாணப் பல்கலையில் தூபியை நாட்டினரே
வீழ்த்தியவருக்காய்ப் பொங்கி வா

அப்பாவிகளையும் அலறி ஓடியவர்களையும்
தப்பாமல் காவுகொண்டமுள்ளிக்குஒப்பாக
உயிர் நீத்த யாவர்க்கும் ஒற்றுமையாய்க் கூப்பவே
உயர் வரம் தரப் பொங்க வா

அடிக்கிற கைதான் அணைக்குமோ? அப்பால்
இடிக்கிற கையும் அமைக்குமே படிக்கிற
புதியபாடமதைப் பல்கலையில் படித்தோம்
பதியுமாறு தை பிறப்பாய்

தூண்டியவர்கள் யாவரும் தப்பிவிட்டனரே
தீண்டியதனால் தனியா(கி)னார் பாவம்ஈண்டிது
பாடமே எமக்கு அவரோ பெரும் மனுஷன்
வாடாமல் காக்க வா தையே

கே.எஸ்.சிவஞானராஜா








# இரட்டை வேடமிடுகிறார் ஜனாதிபதி கோத்தாபய

## ராஜித சீற்றம்

**கொழும்பு,ஜன.14**
**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இரட்டை வேடமிடுகின்றார். கதாநாயகனாக அரசியலுக்கு வந்தவர், இன்று வில்லனாக மாறியுள்ளார். இதனால் அவர்மீது மக்களுக்கு அதிருப்தி அதிகரித்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது,
எதிர்க்கட்சியினர் தங்கள் கடமையை மனம் தளராமல் செய்வதால் ஜனாதிபதி சீற்றமடைந்துள்ளார். தனது முதல்பெயரைப் பயன்படுத்தியதால், விடுதலைப்புலிகளின் தலைவருக்கு நிகழ்ந்தமை தொடர்பாக ஹரின் பெர்னான்டோவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.
தனக்கு இரண்டு குணாதியசங்கள் உள்ளன என்று அவரே தெரிவித்துள்ளார். ஒன்று பாதுகாப்புச் செயலாளராக பணியாற்றிய வேளை வெளிப்படுத்தப்பட்ட குணாதிசயம். மற்றையது தற்போது காணப்படுவது.
அவர் நாட்டில் இராணுவமயமாக்கலை முன்னெடுக்கின்றார்.
42 இராணுவ அதிகாரிகள் ஏற்கனவே பல பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் 25 பேர் நியமிக்கப்படவுள்ளனர்.
தேர்தலில் வெற்றிபெற்ற டிரம்ப் தனது நடவடிக்கைகளில் தோல்வியேற்பட்டதைத் தொடர்ந்து சர்வாதிகாரியாக மாறி நாடாளுமன்றில் கலகத்தில் ஈடுபடுமாறு மக்களை தூண்டினார். அவரின் நிலைமையே தற்போதைய ஜனாதிபதிக்கும் ஏற்படும். என்றார். (க-இ)

## உலகில் அதிக செல்வாக்கு பெற்ற கடவுச்சீட்டுப் பட்டியல் வெளியீடு

கொழும்பு,ஜன.14
2021 ஆம் ஆண்டின் உலகின் அதிக செல்வாக்குடைய கடவுச்சீட்டுக்களின் பட்டியலை ஹென்லி பாஸ்போர்ட் இன்டெக்ஸ் அமைப்பு வெளியிட்டுள்ளது.
இந்தப் பட்டியலில் இலங்கையின் கடவுச் சீட்டானது 100 ஆவது இடத்தில் உள்ளது. இலங்கையின் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி 42 நாடுகளுக்கு விசா இல்லாது பயணிக்க முடியும்.
இந்தியாவின் கடவுச்சீட்டு 85 ஆவது இடத்திலும், பாகிஸ்தானின் கடவுச்சீட்டு 107 ஆவது இடத்திலும் உள்ளன.
இப் பட்டியலில் ஜப்பான் நாட்டின் கடவுச்சீட்டு முதலிடம் பிடித்துள்ளது. ஜப்பான் கடவுச்சீட்டை பயன்படுத்தி 191 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்க முடியும்.
இரண்டாவது இடத்தை சிங்கப்பூரும் (190), மூன்றாவது மற்றும் நான்காவது இடங்களை (189) ஜேர்மன் மற்றும் தென்கொரிய நாடுகளும் பிடித்துள்ளன. (ஐ-இ)

## மருதங்கேணி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

### சுகாதார நடைமுறையுடன் நேற்று இடம்பெற்றது

யாழ்ப்பாணம், ஜன.14
மருதங்கேணி பிரதேச செயலக பிரிவுக்கான ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று மருதங்கேணி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கொவிட் -19 சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக இடம்பெற்றது.
இந்தக் கூட்டத்தில் வீதி அபிவிருத்தி, குடிதண்ணீர்ப் பிரச்சினை, கால்நடை வளர்ப்பு, சமூக உட்கட்டமைப்பு, கல்வி, சுகாதாரம், விவசாயம் போன்ற துறைகளின் அபிவிருத்தி தொடர்பில் ஆராயப்பட்டது. (பு-செ)

## 700 போதை வில்லைகளுடன் சந்தேகநபர் கைது

கொழும்பு,ஜன.14
களுத்துறை மத்துகம பகுதியில் 700 போதை வில்லைகளுடன் சந்தேக நபரொருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபரிடமிருந்து 100 போதை வில்லைகளை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றினர். அவரிடம் தொடர்ச்சியாக மேற்கொண்ட விசாரணைக்கமைவாக, ரஜவத்தபகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் அவரால் மறைத்து வைக்கப்பட்டிருந்த 600 போதை வில்லைகளையும் மீட்டுள்ளனர்.
சந்தேக நபர் துப்பாக்கி மற்றும் கூரிய ஆயுதம் வைத்திருந்தமை தொடர்பில் ஏற்கனவே, கைதுசெய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டவர் என்று பொலிஸாரின் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (க-இ)

## கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் நிலையங்களை அதிகரிக்க முடிவு

கொழும்பு,ஜன.14
கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் நிலையங்களின் எண்ணிக்கையை 4 ஆயிரத்தில் இருந்து 5 ஆயிரம்வரை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
கொரோனா தடுப்பூசித் திட்டம் அதிகாரிகள் மற்றும் தேசிய அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி செயலணி ஆகியவை நேற்றுமுன்தினம் ஒன்றுகூடி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளன.
ஊசி ஏற்றும் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கல், தடுப்பூசியை பெற்றுக் கொள்வோரை பதிவு செய்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டன. (ஐ-இ)

## தாதிய மாணவர்கள் 9 பேருக்கு தொற்று

மட்டக்களப்பு,ஜன.14
மட்டக்களப்பு தாதியர் பயிற்சி கல்லூரி மாணவர்கள் 9 பேர் உட்பட 12 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.
நேற்று அதிகாலை வெளியான பி.சி.ஆர் பரிசோதனையில் இவர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.
132 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தாதியர் பயிற்சி கல்லூரி மாணவர்கள் 9 பேருக்கும், வெல்லாவெளி சுகாதாரப் பிரிவில் 3 பேருக்குமாக 12 பேருக்குத் தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது. (க-இ)

## புடவைக்கடையில் எண்மருக்கு தொற்று

கொழும்பு,ஜன.14
மொனராகலை நகரப்பகுதியில் உள்ள புடவைக்கடை ஒன்றில் பணியாற்றிய எட்டுப் பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இதனை அடுத்து நகரத்தில் உள்ள அனைத்துக் கடைகளையும் மூடுவதற்கு மொனராகலை பிரதேச சபை மற்றும் மொனராகலை வர்த்தகர் சங்கம் ஆகியன நடவடிக்கை எடுத்துள்ளன.
எனினும் மொனராலையில் எந்தவொரு பாடசாலையும் மூடப்படவில்லை. நகரத்தைச்சுற்றி தனிமைப்படுத்தல் எதுவும் மேற்கொள்ளப்[illegible]இல்லை. (க-இ)

## தடுப்பூசியால் பயனில்லை



கொழும்பு,ஜன.14
உலக சுகாதார அமைப்பு அங்கீகாரம் வழங்காத தடுப்பூசியை, இலங்கைக்கு எடுத்து வருவதில் எவ்வித பயனும் இல்லை என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.
இலங்கைக்கு கொரோனாத் தடுப்பூசியை எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்படுமாயின், அதற்கான தொழிநுட்ப குழுவின் ஆலோசனைகளைப் பெற வேண்டும் என்று மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.
எனவே ஆபத்தான தடுப்பூசியை எடுத்து வருவதில் பயன் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க-இ)

## அன்டிஜன் பரிசோதனை தொடரும்

கொழும்பு,ஜன.14
மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறுவோருக்கு முன்னெடுக்கப்பட்ட ரெபிட் அன்டிஜன் பரிசோதனை, தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறும் 11 இடங்களில் பரிசோதனை முன்னெடுக்கப்படும்.
கடந்த டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் ஜனவரி மாதம் 5 ஆம் திகதி வரை ரெபிட் அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.
இதன்போது பலர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

## சிறுவனு[illegible]கு கொரோனா

கொழும்பு,ஜன.14
மொனராகலை மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த, 8 வயதுச் சிறுவனுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று மருத்துவமனை பணிப்பாளர் ஆர்.எம்.டி ஜெயசிங்க தெரிவித்தார்.
விரைவான அன்டிஜன் பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
சிறுவனது தாய் மொனராகலவில் உள்ள ஒரு தனியார் வங்கியில் பணிபுரிகிறார் கொரோனாத் தொற்று உள்ளமை நடத்தப்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.
சிறுவன் மேலதிக சிகிச்சைக்காக ஹம்பாந்தோட்டை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (க-இ)

## இன்றைய நாள்

**மேடம்:** எதிர்பாலினத்தவருடன் பழகும்போதும், பேசும்போதும் கவனம் தேவை. திருப்தியான நாளாகும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும். பணிகளில் நிதானமாக செயல்படுவது

**இடபம்:** முயற்சிகளில் வெற்றி வரும். எதிர்பார்த்த நன்மை நிகழும். குடும்பக் கவலைகள் மறையும். செலவைச் சமாளிக்க முடியும். பணவரவு நன்றாக இருக்கும்.

**மிதுனம்:**ஆன்மிக எண்ணங்கள் உருவாகும். தேவையற்ற பயம் தீரும்.வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டு. கனவு நனவாகும். இளைஞர்களுக்கு சிறிய வெற்றி ஏற்படும்.

**கடகம்:** அலுவலகத்தில் உள்ள நிலுவைப் பணிகளை முடித்துக் காட்டுவீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும்.பகையை விடுத்து நட்பாவது பற்றிச் சிந்திப்பீர்கள். லாபம் உயரும்.

**சிம்மம்:** மதிப்பும், மரியாதையும் கூடும். பிறரது செயல்கள் கோபத்தைத் தூண்டலாம். நிதானமாக செயல்படுவது நன்மையைத் தரும். திறமை கூடும். மனஸ்தாபங்கள் நீங்கும்.

**கன்னி:** வேண்டப்பட்டவரின் உடல்நலம் மேம்படும். வீடு கட்டுவீர்கள். எந்தப் பிரச்னையையும் சமாளிக்கும் தைரியம் ஏற்படும். வசதியான வீட்டுக்கு மாறுவீர்கள். கடன்கள் இனி இல்லை.

**துலாம்:** இதுவரை கஷ்டப்படுத்திய மேலதிகாரி மாற்றலாகிச் செல்வார். கொஞ்சம் சேமிக்க முடியும். கற்பனை பயங்களால் சிரமப்படுவீர்கள். அலுவலகப் பணிகளில் இறுக்கமான சூழ்நிலை.

**விருச்சிகம்** இடமாற்றம் உண்டாகலாம். பணிகளை முயற்சியால் முடிப்பீர்கள். மற்றவருக்காக கூடுதல் உழைப்பை வெளிப்படுத்துவீர்கள். கடந்த காலக் கவலைகள் திடீரென்று காணாமல் போகும்.

**தனுசு** கற்பனை வளம் அதிகரிக்கும். காதல் கைகூடும் வாய்ப்புள்ளது. முந்தைய முயற்சிகளில் முன்னேற்றமான புதிய வழி கண்டறிவீர்கள். சிலர் பணியிட வாய்ப்பை பயன்படுத்தி முன்னேறுவார்கள்.

**மகரம்** மனஇறுக்கம் தீர்ந்துவிடும். தன்னம்பிக்கையுடன் இருங்கள். மின்சாரம் மற்றும் இயந்திரங்கள் பற்றி எச்சரிக்கை தேவை. பணியிடப் பொருளைக் கையாளும்போது அலட்சியம் வேண்டாம்.

**கும்பம்:** மேலதிகாரி உங்கள் விருப்பமறிந்து நடந்து கொள்வார். மதிப்பு மிக உயரும். ஆரம்பித்த விஷயம் நல்லபடியாக நடைபெறும். இத்தனை நாள் பூர்வீகச் சொத்திலிருந்த வில்லங்கம் நீங்கும்.

**மீனம்:** தேங்கியிருந்த விஷயங்களை முனைந்து முடித்துக் காட்டுவீர்கள். வியாபாரிகள் வட்டிக்கு வாங்கியிருந்த கடன்களை அடைப்பர். சாதனைத் திருப்பம் உண்டாகும்.சேமிப்புக்கூடும்.

# தேவிபுரம் கிராம பகுதியில் காட்டு யானைகள் தொல்லை

### நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.14

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியில் காட்டுயானையால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றோம் என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சுமார் 30 வரையான தென்னை மரங்கள் மற்றும் 150 வரையான வாழை மரங்கள் ஆகியவை நேற்றுமுன்தினம் இரவு காட்டுயானைகளால் அழிக்கப்பட்டுள்ளன.



தொடர்ச்சியாக ஏற்படும் காட்டுயானைகளின் தொல்லையால் விவசாயச் செய்கையை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது என கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், விவசாயத்தையே வாழ்வாதாரமாகக்கொண்டு இக் கிராம மக்கள் வாழ்ந்துவரும் நிலையில், தமது கிராமத்துக்கு மின்சார இணைப்பு இல்லை எனத் தெரிவித்த மக்கள், தமது கிராமத்துக்கு மின்சார இணைப்பும் யானைவேலியும் அமைத்து தர அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்கள். (ந-19)

## மறைத்து வைக்கப்பட்ட நிலையில் ஹெரோய்ன் மீட்பு

கொஸ்கொட வனப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 20 கிலோகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. பொலிஸ் விசேட அதிரடி படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## வாக்காளர் பெயர்ப்பட்டியலில் உங்கள் பெயரை உறுதிப்படுத்துக

கொழும்பு, ஜன.14

வாக்காளர் பெயர்ப்பட்டியலில் உங்கள் பெயர் இல்லாவிட்டால் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் 0112860034 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறிவிக்குமாறு ஆணைக்குழு கோரியுள்ளது. 2020 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப்பட்டியலில் உங்கள் பெயர் இடம்பெற்றுள்ளதா? என்பதை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் www.election.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளம் ஊடாக சரிபார்த்துக் கொள்ளுமாறும் அல்லது அந்தந்த கிராம அலுவலரிடமும் இதனை அறிந்துகொள்ள முடியும் எனவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

மன்னார் தேவன்பிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 155 மாணவர்களுக்கும், முல்லைத்தீவு பாலிநகர் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 160 மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் சுவிஸ் சிறிமுருகன் ஆலயத்தின் நிதி உதவியுடன் நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.



# பதினேழாவது அகவையில் நூலக நிறுவனம்

ஈழத்துத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான அனைத்து அறிவுத் தொகுதிகளையும், ஆய்வின் அடிப்படையில் ஆவணப்படுத்தி வெளியிடும் நூலக நிறுவனம் உங்கள் ஒவ்வொருவரையும் ஆவணப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுக்க அழைக்கிறது.

நூலக நிறுவனமானது இலங்கையின் தமிழ் பேசுகின்ற பல்வேறு சமூகங்களின் மரபுரிமைகளை, அறிவுத் தொகுதிகளை ஆவணப்படுத்துவதுடன், அவற்றை அனைவருக்கும் திறந்த அணுக்கத்தில் இணையத்தளங்களினூடாக வழங்குகின்ற தன்னார்வ நிறுவனமாக விளங்குகின்றது. குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களின் வரலாற்றை ஆவணப்படுத்துவதில் பெரும் சிக்கல்கள் உள்ளன. உள்நாட்டுப் போர் இடர்ப்பாடுகளால் பல்வேறு மரபுரிமைச் சொத்துக்கள் அழிந்துவிட்டன.

இதன் தொடர்ச்சியில், அழிந்துபோகும் நிலையிலுள்ள ஆவணங்களைப் பாதுகாத்துப் பேணுதல் என்ற அடிப்படையில், 2005 ஆம் ஆண்டு முதல் அவற்றைத் தேடிப் பயணித்து, சேகரித்து எண்ணிம ஆவணகமாக நூலக நிறுவனம் தொழிற்பட்டு வருகிறது. தனது 16 ஆவது அகவை நிறைவில் 97 ஆயிரம் ஆவணங்களுடன், 17 ஆவது அகவையில் காலடி வைக்கிறது. ஓர் ஆவணம் அச்சிடப்படத் தகுதியானது என்றால், அது ஆவணப்படுத்தப்படவும் தகுதியானதே. நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறப்பு மலர்கள், அறிக்கைகள், கல்வெட்டுக்கள், சுவடிகள், பிரசுரங்கள், கையெழுத்துப்பிரதிகள், கடிதங்கள், துண்டுப்பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், விளம்பரங்கள், போன்றவற்றுடன் ஒளிப்படங்கள், ஒலி, ஒளிக் கோப்புகள், வாய்மொழிக் கதைகள் போன்ற ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளத் தயாராக உள்ளோம். உங்கள் ஆவணங்களை உரிய அனுமதியுடன் ஆவணப்படுத்த முன்வாருங்கள்.

அவை தொடர்பான உங்களுடைய கேள்விகளுக்குப் பதிலளிக்க நூலக நிறுவனம் தயாராக உள்ளது. நீங்கள், எமது நூலக நிறுவனத் தொலைபேசி +94 21 223 1292 அல்லது noolahamfoundation@gmail.com என்ற மின்னஞ்சல் ஊடாகவும் தொடர்பு கொள்ள முடியும். இல 55, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டுக்குளி யாழ்ப்பாணம் என்ற முகவரியிலும் தொடர்பு கொள்ள முடியும்.

# முயற்சித்தால் சாதிக்க முடியாதது ஏதுமில்லை

இளமைப் பருவத்தை எம் மூத்தோர்கள், "ஓடுகின்ற பாம்பைக் கையில் பிடிக்கின்ற பருவம்" என்று வர்ணித்திருக்கிறார்கள் . " இளங்கன்று பயமறியாது . "இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்" என்றெல்லாம் நாம் பலர் சொல்லக் கேட்டிருக்கிறோம் . ஆனால், இன்றைய நிலைமையைப் பார்க்கும் போது , நாம் கற்றுணர்ந்தவை எல்லாம் உண்மையா இல்லையா? என்ற ஐயம் எம் மனங்களில் தலை தூக்குகிறது. இன்றைய நிலையில் மூத்தோரிடம் காணப்படும் கடின உழைப்பும் தன்னம்பிக்கையும் இளையோர்களிடத்தில் இல்லை !

" அரிது ! அரிது ! மானிடராய்ப் பிறத்தல் அரிது ! அதனினும் கூன் , குருடு செவிடு நீங்கி பிறத்தல் அரிது! " என்றார் ஔவையார்.

எந்தக் குறையுமின்றி இந்த அரிய பிறப்பைப் பெற்றிருக்கும் இளைஞர்களிடம்கூட, இளமைப் பருவத்தில் தன்னம்பிக்கையும் கடின உழைப்பும் குறைந்து காணப்படுவது வருத்தத்துக்குரியதாக உள்ளது. இன்றைய சூழலில் அறிவியல் ஞானமும் அதனால் விளைந்த தொழில் நுட்பங்க ளும் நாகரீக வளர்ச்சியும் வாழ்க்கை முன்னற்றத்துக்கு தேவையான அத்தனை வசதிகளையும் பல்வேறு பரிமாணங்களில் வழங்கிக் கொண்டிருக்கின்றன . இவை மட்டும் ஒருவனுக்கு வெற்றியைத் தந்துவிடா. கடின உழைப்பும் , தன்னம்பிக்கையும் மேற்கூறியவற்றோடு ஒன்றிணைந்தால் தான் அவன் வெற்றியடைய முடியும். ஆனால் , இன்றைய இளையோர்களோ , வெற்றிக்காகப் போட்டி போட்டுக் கொண்டிருக்கும் பலரோடு விடாமுயற்சியுடனும் தன்னம்பிக்கையுடனும் போராடாமல் , " எப்படியும் தோற்கத் தான் போகிறோம்" என்று சோர்வடைகிறார்களே தவிர வெற்றியை அடையக் கடினமாக உழைப்பதில் நாட்டம் காட்டுவதில்லை , வாழ்க்கை என்பது வெறும் ரோஜா மலர்களால் ஆன பாதையல்ல ; முட்செடிகளும் நிறைந்தது . குயில்களின் இனிய கூவல்கள் மட்டுமல்ல ; கோட்டான்களின் அலறல்களும் நிறைந்தது . சிங்கத்தின் கர்ஜனை மட்டுமல்ல; ஓநாய்களின் ஊளையும் நிறைந்தது . வெற்றிகள் மட்டுமல்ல தோல்விகளும் நிறைந்தது. இது இன்றைய இளைஞர்களுக்குப் புரிவதில்லை . ஒருமுறை தோல்வியைச் சந்தித்துவிட்டால் , துவண்டு விடுகிறார்கள். மீண்டும் முயற்சித்தால் தோல்விதான் மிஞ்சும் என்று தங்களுக்குத் தாங்களே சித்தாந்தம் பேசிக் கொள்கிறார்கள் . விளைவு ? அவர்கள் விழுந்த இடத்திலேயே கிடக்கிறார்கள். தோல்விகள் அவர்களைக் கொடுங்கனலாய்த் தகித்துக் கொண்டேயிருக்கின்றன . அவர்கள் அடையும் ஒவ்வொரு தோல்வியும் , அவர்களது வெற்றிக்கு அவர்களே நாட்டிக் கொள்ளும் படிக்கட்டுகள் என்பதை அவர்கள் உய்த்துணர்ந்தால்தான் , தோல்வியிலிருந்து மீண்டு " நம்மால் முடியும்" , என்ற தன்னம்பிக்கைப் பெற முடியும் .





எமது மனம் விழித்தெழுந்து விட்டால் சாதிக்க முடியாதது ஏதுமில்லை. நாம் பேசும் ஒவ்வொரு சொல்லிலும் மாபெரும் சக்தி ஒளிந்திருக்கிறது. மனதின் வேகம் தான் நம் எண்ணத்தின் வேகம். எண்ணத்தின் வேகம் தான் உடலின் வேகம். இதனைப் புரிந்து கொண்டால் எதைச் செய்கிறோம், ஏன் செய்கிறோம், வேலையில் நாம் காட்டும் வேகம் அல்லது நிதானம் ஏன் இப்படி இருக்கிறது என்பது புரியும்.

காட்டில் முயல் ஒன்று மேய்ந்து கொண்டிருந்தது. அதைக் கண்ட சிறுத்தை ஒன்று, தன் பசியைப் போக்க முயலைத் துரத்த ஆரம்பித்தது. முயலும் ஓட ஆரம்பித்தது. ஆனால் சிறுத்தை விடுவதாக இல்லை.


ஆனால், ஒரு கட்டத்தில் தன்னால் முயலைப் பிடிக்க முடியாது என்று சிறுத்தை முடிவு செய்து, "முயலாரே! நான் தோற்றுவிட்டதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் என் மனதில் ஒரு குழப்பம். நானோ வேகமாக ஓடும் மிருகம். நீயோ சாதாரண முயல். உன்னால் எப்படி என்னை விட வேகமாக ஓட முடிகிறது?" எனக் கேட்டது. "அது எனக்கும் தெரியும். ஆனால் நாம் இருவரும் எதற்காக ஓடுகிறோம் என்ற தெளிவு இருந்தால் உம்முடைய குழப்பம் தீரும். நீர் சாப்பாட்டிற்காக ஓடுகிறீர்; நானோ உயிர் பிழைக்க ஓடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டு முயல் ஓடி மறைந்தது!

இந்தக் கதையில் ஒரு தத்துவம் அடங்கியிருக்கிறது. எந்த வேலையைச் செய்தாலும், இதை ஏன் செய்கிறோம், இதனால் என்ன பயன்? செய்யாவிட்டால் நாம் எதை இழப்போம் என சிந்திக்க வேண்டும்.

எந்த வேலையை செய்தாலும், இதை ஏன் செய்கிறோம், இதனால் என்ன பயன், செய்யாவிட்டால் நாம் எதை இழப்போம் என சிந்தித்து செயற்பட வேண்டும்.

கல்வி கற்கும் போது மாணவர்களிடையே, சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் நாள்கள் செல்லச் செல்ல பலரிடம் அது காணாமல் போய்விடுகிறது. அவர்கள் சாதிக்க விரும்பியதை , சிந்தைக்குள் புகுத்தி , மனத்தில் இருத்தி , அதை அடையத் தேவையான முயற்சியையும் உழைப்பையும் மூலதானமாகப் போட வேண்டும் . 'கடலலை , கரையைத் தன்னுள் விழுங்கிவிட வேண்டும் என்று எண்ணுவதால்தான் அது ஓயாமல் கரையை நோக்கி வந்துகொண்டிருக்கிறது . தன்னால் முடியவில்லை என்று அது விடவில்லை ! அதைப் போல இன்றைய இளைஞனும் தான் சாதிக்க எண்ணியதை அடைய , விடாது முயற்சி செய்ய வேண்டும் . நினைத்ததை அடைய, கடலலை குமுறுவதைப் போல், இளையோரும் தங்களுக்குள் குமுறிக் கொண்டே இருக்க வேண்டும். அப்போது தான் அவர்களுக்குள் தன்னம்பிக்கை பிறக்கும்.

நினைத்ததைச் சாதிக்க முடியும் !



# தமிழ் அரசியல்வாதிகளுக்காக எதிர்காலத்தை வீணாக்காதீர்!

## இளைஞர்களைக் கோருகிறார் கிழக்கு ஆளுநர்

திருகோணமலை, ஜன.14

இளைஞர்களின் எதிர் காலத்தை, தமிழ் அரசியல்வாதிகளின் சொந்த அரசியலுக்காக தியாகம் செய்யக் கூடாது என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் தெரிவித்தார்.

வடக்கு கி[illegible] மேற்கொள்ளப்பட்ட ஹர்த்[illegible]டிப்பு தொடர்பாக ஊட[illegible] கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய இளைஞர்கள் தங்களது வாழ்க்கையை வெற்றிகரமாக ஆக்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டியதோடு, மாகாணத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளுடன் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும். சிறிய நினைவுச் சின்ன செயற்பாடுகளுக்காக இளைஞர்கள் தங்களின் வாழ்க்கையைப் பயன்படுத்தக்கூடாது. இவ்வாறான சிறிய விடயங்களை தமிழ் அரசியல்வாதிகள் போராட்டங்களாக மாற்றிவிடுவார்கள்.

இவ்விடயத்தில் அரசியல் தலைமைகள் சிந்தித்து செயற்பட வேண்டும். இந்த தமிழ் இளைஞர்களின் பங்களிப்பை நாட்டின் முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார். (ந)

# கோத்தா மீது அவதூறு; கைதானவர் மறியலில்

கொழும்பு, ஜன.14

ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்சவுக்கு முகநூல் ஊடாக அவதூறான கருத்துக்களைப் பதிவிட்ட முஸ்லிம் நபர் ஒருவர் கொழும்பு - தெஹிவளையில் வைத்து நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தெஹிவளை - பீற்றர் வீதியைச் சேர்ந்த மொஹமட் சபால் நவ்ஸாட் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பு பிரதான நீதிமன்றில் அவர் முன்னிலைப்படுத்தப் பட்ட போது அவரை எதிர்வரும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (வ-இ)

**தேவை** TVS Star City மோட்டார் சைக்கிள், TVS Victor மோட்டார் சைக்கிள், Bajah Boner மோட்டார் சைக்கிள் தேவை.

077 466 9597

**வெள்ளவத்தை**

**தொடர் மாடி வீடு விற்பனைக்கு**

இரண்டு அறை, சமையலறை, Hall, இரண்டு குளியலறை COC, Deed, உடைய தொடர் மாடி வீடு விற்பனைக்கு முற்றிலும், குளிருட்டப்பட்டது (சமையலறை தவிர்த்து) தனிப்பட ஒதுக்கப்பட முற்றிலும் அடைக்கப்பட்ட வாகன தரிப்பிடம்.

விலை 20.5 மில்லியன் வங்கி கடன் எடுக்க முடியும் உடன் காசு விஷேட விலைக்கழிவு

தொடர்பு: 0772 647 426

## கண்ணீர் அஞ்சலி



துளிர்வு 29 . 03 . 1959

மறைவு 12 . 01 . 2021

**Miss you**

எமது சங்கத்தின் முன்னாள் செயலாளரும் தற்போதைய உறுப்பினருமான **திரு.யோ.ஜெனராஜ்** அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் நாகராசா யோகராசா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


**ஊழியர் நலன்புரிச்சங்கம்**
**அரச முதியோர் இல்லம், கைதடி.**

## பகிரங்க ஏல விற்பனை தொடர்பானது

ஒட்டுசுட்டான் கமநல சேவை அதிகாரப்பரப்பிற்குட்பட்ட 3 ஆம் கண்டம் கற்சிலைமடு கமக்கார அமைப்பின் கீழான வயல் நிலத்தில் தொடர்ச்சியாக பயிரழிவினை ஏற்படுத்திய கறுப்பு நிறம் (நெற்றிச் சுட்டி, நான்கு கால்கள் சிலம்பு முன்னங்கால் V குறி பின்னங்கால் II குறி) கொண்ட 4 வயது மதிக்கத்தக்க பசுமாடு 04.01.2021 கமக்கார அமைப்பு கால்நடை கட்டுப்பாட்டாளர்களால் பிடிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. அப்பகுதி கிராம அலுவலர், அயல் கமக்கார அமைப்புக்கள், ஒட்டுசுட்டான் மிருக வைத்திய அதிகாரி என்போருக்கு தகவல் பரிமாறப்பட்டும் உரிமையாளர்கள் இதுவரை தொடர்பினை மேற்கொள்ளவில்லை. எனவே உரிமையாளர்கள் 18.01.2021 திகதிக்கு முன்னர் கமநல சேவை நிலையத்தினை நாடுமாறு கோரப்படுவதுடன் உரிமை கோரப்படாவிடின் 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 92 ஆவது பிரிவின் பிரகாரம் பகிரங்க ஏல விற்பனை 19.01.2021 அன்று முற்பகல் 10.00 மணிக்கு கமநல சேவை நிலைய முன்றலில் இடம்பெறும் என்பதுடன் அன்றைய தினமே பகிரங்க ஏல விற்பனை மூலம் கால்நடையினை பெற்றுக்கொள்பவர் கமநல சேவை குழுவிற்கு பணத்தினைச் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதுடன் கால்நடையினையும் அன்றே அப்புறப்படுத்த வேண்டும் என்பதனையும் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தராகிய ம. சற்குணநேசன் ஆகிய நான் அறியத்தருகின்றேன்.

**கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்,**
**கமநல சேவை நிலையம்,**
**ஒட்டுசுட்டான்.**

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி



மண் மலர்ந்தது 18 11 1947

விண் நிறைந்தது 14 01 2017

வைத்திய கலாநிதி

**குமாரசாமி மகேசன்**

வைத்திய சேவையை தொழிலாகக் கொண்டு
மக்கள் சேவை செய்த அன்பு,பண்பு,கடமை
உள்ளம் கொண்ட மகேசன் ஐயாவை
குடும்பத்தினராகிய நாம் இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**குடும்பத்தினர்**

# வான்கதவுகள் திறந்தும் வான்பாய்கிறது இரணைமடு

மக்களுக்கு எச்சரிக்கை

கிளிநொச்சி, ஜன. 14

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் தண்ணீர்மட்டம் 37அடி 05 அங்குலமாக அதிகரித்து, வான்கதவுகள் ஊடாகவும் வான் வழியாகவும் வெளியேறும் நீரின் அளவு அதிகரித்துள்ளது. அதனால் தாழ் நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

முரசுமோட்டை ஐயன் கோவிலடி கிராமத்தில் வெள்ள நீர் புகுந்ததால் ஐந்து குடும்பங்கள் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளன.

மேலும் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பலர் தமது கால்நடைகளையும் உடமைகளையும் கொண்டு இருப்பிடங்களைவிட்டு இடம்பெயர்கின்றனர். முரசுமோட்டை, கண்டாவளை மற்றும் ஊரியான் பகுதிகளில் வாழும் மக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. (த-6)



கந்தரோடை

**அருள்மிகு அருளானந்தப்பிள்ளையார் ஆலயம்**

**ஆனந்த குருகுலம்**

மேற்படி குருகுலத்தில் அந்தண மாணவர்களுக்கான சம்ஸ்கிருத வகுப்புக்கள் 28.01.2021 தைப்பூச நன்னாளில் ஆரம்பமாக உள்ளது. இதில் கல்வி பயில விரும்பும் அந்தண மாணவர்கள் மேற்படி ஆலயத்தில் தொடர்புகொள்ளவும்.

**பொறுப்பாசிரியர்:**
**சிவசிறி.ப.ஜெயகுமாரக்குருக்கள்**
**T.P: 077 691 4236**

**ஆதீனகர்த்தா,**
**இ.சோமேஸ்வரசர்மா**

## மரண அறிவித்தல்



தோற்றம் 18 - 03 - 1948

மறைவு 13 - 01 - 2021

**திரு. கிருஸ்ணபிள்ளை ரவீந்திரன்**

சிவன் கோவில் வீதி 02ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், உண்டுவத்தை, அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை ரவீந்திரன் அவர்கள் 13-01-2021 நேற்று புதன்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை - இராசதேவி தம்பதிகளின் பாசமிகு மகனும், கனகசபை - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், மங்கள பூபதி அம்மாவின் பாசமிகு கணவரும், தவமணி, வள்ளிநாயகி, விஜயலட்சுமி காலஞ்சென்றவர்களான இராசேந்திரன், இராசயோகம், ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயந்தி (சுவீடன்), பாஸ்கரன் [UK], சுதாகரன் [UK] ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகராசா (சுவீடன்), நித்தியகலா [UK], அனுசாந்தி [UK] ஆகியோரின் அன்பு மாமனாரும், காருஜன், அபிஸ்னா (சுவீடன்), திவ்யா, சோபியா [UK], அஸ்மியா, ஆரபி [UK] ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 13-01-2021 நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**உண்டுவத்தை,**
**அல்வாய்.**

**தகவல் :**
**பெறாமகள்,**
**தசரதன் தமயந்தி.**

## மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 05 . 1939

மறைவு 12 . 01 . 2021

**திருமதி டேவிட் திரேசம்மா**

புனித யாகப்பர் ஆலய வீதி, இளவாலையைச் சேர்ந்த திருமதி டேவிட் திரேசம்மா கடந்த (12.01.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சூசை டேவிட் அவர்களின் அன்பு மனைவியும், கிறிஸ்ரி ஆனந்தராஜ் (இத்தாலி), பிராங் ஜெயரட்ணம் (கொழும்பு), நிர்மலா (இலண்டன்), கிளமென்ட் புஸ்பராஜ் (ஜேர்மனி), அருட்பணி D.F. ரட்ணராஜ் (அமதி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயராஜ் பிலேந்திரன், சுமதி, மரியஅமலவுற்பவம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இளவாலை தூய யாகப்பர் ஆலயத்தில் பி.ப 3.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு, தூய யாகப்பர் சேமக்கலையில் நல்லடக்கம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**D.F.ஜெயரட்ணம் (மகன்)**

## 74 குடும்பங்கள் முல்லையில் பாதிப்பு

முல்லைத்தீவு, ஜன. 14

மழையுடனான சீரற்ற காலநிலை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று மாலைவரை 74 குடும்பங்களைச் சேர்ந்த 174 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். முள்ளியவளை மேற்கு கிராம அலுவலர் பிரிவில் இரு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 55 குடும்பங்களைச் சேர்ந்த 152 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஓர் இடைத்தங்கல் முகாமில் 20 குடும்பங்களைச் சேர்ந்த 43 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 3அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (த-இ)

## விபத்தில் பெண் காயம்

சாவகச்சேரி, ஜன. 14

மிருசுவில் விடத்தற்பளையில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில், 38 வயதுடைய குடும்பப் பெண் காயமடைந்தார்.

இதே இடத்தைச் சேர்ந்த அந்தப் பெண், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (த-9)

## அடகுநகை விற்பனை அறிவித்தல்
## ராஜ் ஜுவல்லர்ஸ் திருநெல்வேலி

### முக்கிய அறிவித்தல்

15.12.2019 ஆம் திகதி தொடக்கம் 15.02.2020 வரை அடகுவைத்த நகைகளை 18.02.2021 க்கிடையில் மீட்டுக்கொள்ளவும். அல்லது முழு வட்டியையும் செலுத்தி புதுப்பித்துக்கொள்ளவும்.

தவறின் 18.02.2021 ஆந் திகதி விற்பனை செய்யப்பட்டுவிடும். அதன் பின் எக்காரணம் கொண்டும் மீட்க முடியாது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

இல.31C ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
(சந்தைக்கு அருகில்)

021 221 7287, 076 636 1238



## 17 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் பேரானந்தம் உமாசுதன்
(போட்டோ சுதன்)

மண்ணில் 11 . 12 . 1974

விண்ணில் 15 . 01 . 2004

புன்னகையால் அனைவர் உள்ளத்தையும் கொள்ளையடித்து
வார்த்தைகளால் அனைவரையும் கவர்ந்து
உதவி செய்வதற்கு என்று சென்று இறுதியில்
எம் அனைவரையும் விட்டு வெகுதூரத்தில் - சென்று விட்டாயே சுதனே!!!
உலகம் உள்ள வரை நீங்காது உன் நினைவுகள்.....

காரானர் வளவு,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

என்றும் உன் நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.



## Management Accountant

**Location** Jaffna

Industry Information Technology, Retail, Finance & accounting, Accountancy

**UK based organisation associated with InformationTechnology and Retail, loo king for an Accountant.**

Your new role - the Management Accountant will provide a comprehensive management accounting and business partnering service to individual operational directorates. You will provide robust financial forecasts and costing models and take sole responsibility for specific business areas. You will undertake a lead role on providing financial data for the management and development of information reporting and analysis, in line with regulatory requirements and provide expert financial input, advice and support to budget holders with regards to service development proposals.

What you'll need to succeed - this role would suit a qualified Accountant with management accounting experience. You will be a strong communicator and have excellent systems skills.

What you need to do now
If you're interested in this role, forward an up-to-date copy of your CV, or call us now.

If this job isn't quite right for you but you are looking for a new position, please contact us for a confidential discussion on your career.

Email:- bala@oyslans.co.uk
Telephone :- +44 7956123456
WhatsApp :- +44 7956123456


# ப.தெ.அ. சங்க தொழிலாளர்கள் 2ஆம் நாளாகவும் உணவு தவிர்ப்பு



கிளிநொச்சி, ஜன. 14 தமது கோரிக்கைகளை நிறைவேற்று மாறுகோரி பனை தென்னைவள அபிவிருத்திச் சங்கத்தின் இரு தொழிலாளர்கள் இரண்டாவது நாளாக நேற்றும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

அதேவேளை, கரடிப்போக்குச் சந்தியிலிருந்து மாவட்டச் செயலகம்வரை நடைபவனியிலும் ஈடுபட்டனர். இறுதியில் மாவட்டச் செயலரிடம் மனுக்கையளித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பனை தென்னை அபிவிருத்தி சங்கத்தில் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு உதவிஆணையாளரால் நியமனம் செய்யப்பட்ட நிர்வாகம் முறையாக தெரிவுசெய்யப்படவில்லை என்று குற்றஞ்சாட்டிய போராட்டகாரர், கடந்த 5ஆம் திகதி கிளிநொச்சி கூட்டுறவு உதவி ஆணையாளர் தெரிவுசெய்த நிர்வாகதத்தை மாற்றுமாறும், முன்னர் பொதுக்குழு தெரிவுசெய்திருந்த நிர்வாகத்தின் ஒழுங்குபடுத்தலில் கிளைக்குழுவைக்கூட்டி நிர்வாகத்தைத் தெரிவு செய்யுமாறும் கோரியுள்ளனர். இதனை வலியுறுத்தி கிளிநொச்சி மாவட்ட பனை தென்னை அபிவிருத்தி தொழிலாளர்கள், சங்க வளாகத்துக்குள் அண்மையில் எதிர்ப்புநடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். கூட்டுறவு உதவி ஆணையாளரிடம் இருநூறுக்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் கையொப்பத்துடன் மனுக்கையளித்திருந்தனர். எனினும், இதுவரை எதுவிதநடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் கூறும் தொழிலாளர்கள், தமது கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரியுள்ளனர்.

(துரி)


## மணிவிழா வாழ்த்து

### திருமதி தனபாக்கியேஸ்வரி கிருபானந்தமூர்த்தி

(மனைப் பொருளியல் ஆசிரியர் -SLTS -I



**சேவை விவரம்:**

- யாழ்/ குடமியன் அ.த.க.பாடசாலை 10.11.1988 – 04.04.1991
- யாழ்/ கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை 05.04.1991 – 31.12.1992
- யாழ்/ மிருசுவில் அ.த.க. பாடசாலை 01.01.1993 – 31.12.1993
- யாழ்/ வரணி வடக்கு சைப்பிரகாச வித்தியாசாலை 31.01.1994 – 29.06.2006
- யாழ்/ வீரசிங்கம் மத்திய கல்லூரி 01.07.2006 – 06.02 2015
- யாழ்/ டிறிபேக் கல்லூரி 09.02.2015 – 14.01.2021

Best Wishes

டிறிபேக் கல்லூரியின் 6 வருட ஆசிரியர் சேவையில் அன்பின் விருட்சம், ஆற்றலின் உறைவிடம் மௌனப் பெட்டகம், பொறுமையின் இலக்கணம் சொல்லும் செயலும் ஒன்றாய்ப் பொருந்தும் ஆசிரியத்தின் அற்புத விளக்கு - நீங்கள் பல்லாண்டு காலம் சீரோடு வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

வட்டமேசை யா/ டிறிபேக் கல்லூரி


## கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி
## ஆதனவரி பற்றிய பொது அறிவித்தல்

கரைச்சி பிரதேசசபையின் ஆதன வரி வட்டாரங்களாகிய கிளிநகர், கணேசபுரம்,உதயநகர்,திருவையாறு,கனகாம்பிகைக்குளம்,பாரதி புரம், கிருஸ்ணபுரம் மற்றும் செல்வாநகர் வட்டாரபொதுமக்கள்,வர்த்தநிலைய உரிமையாளர்கள்மற்றும் அரசதனியார் நிறுவனங்கள் சபையின் கீழ்வரும் அறிவித்தலுக்கேற்ப ஆதனவரி அறவீட்டு நடவடிக்கைக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கியுதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

1. 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுக்கானஆதனவரிசெலுத்தாதவர்கள் நிலுவையின்றிஆதனவரியைசெலுத்தவேண்டும்

2. 2021 ஆம் ஆண்டிற்கானஆதனவரியைதைமாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தும் பட்சத்தில் 10 சதவீதகழிவுவழங்கப்படும். இச்சலுகையைகருத்திற் கொண்டு இம்மாதம் 31 ஆம் திகதிவரை சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களிலும் மு.ப 8.30 மணியிலிருந்துபி.ப 3.00 மணிவரை ஆதனவரி அலுவலகம் திறக்கப்படும்.

3. ஆண்டிற்குரிய ஆதனவரியை முழுமையாக செலுத்த இயலாதவர்கள் 4 காலாண்டுகளில் கீழ் வரும் அட்டவணைக் சே[illegible] பகுதியாகச செலுத்தி கழிவை பெற்றுக்கொள்ளவும் இயலும்.

| காலாண்டு | செலுத்தவேண்டியதிகதி | 5%கழிவிற்குஉரித்துபெறும் இறுதித்திகதி |
|---|---|---|
| முதலாவதுகாலாண்டு | 01.01.2021-31.03.2021 | 31.01.2021 |
| இரண்டாவதுகாலாண்டு | 01.04.2021-30.06.2021 | 30.04.2021 |
| மூன்றாவதுகாலாண்டு | 01.07.2021-30.09.2021 | 31.07.2021 |
| நான்காவதுகாலாண்டு | 01.10.2021-31.12.2021 | 31.10.2021 |

4. ஆதனவரியை உரியகாலங்களில் செலுத்தாதவிடத்து வதிவிடங்களுக்கு 10 சதவீதமும், வெற்றுக்காணிகள் மற்றும் வதிவிட வளவுகள் மீது 15 சதவீதமும் வணிகமற்றும் ஏனைய ஆதனங்களிடமிருந்து 20 சதவீதமும் விறாந்துச்செலவாக (தண்டம்) அறவிடப்படும்.

கௌரவஅருணாசலம்
வேழமாலிகிதன்
தவிசாளர்

# மரண அறிவித்தல்

பிறப்பு
15 . 10 . 1934



இறப்பு
13 . 01 . 2021

## அமரர் செல்லத்துரை பொன்ராசா

(ஓய்வுபெற்ற வேலைத்திட்ட மேற்பார்வை அதிகாரி)

நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது வட்டு கிழக்கு மாவடி, வட்டு மேற்கு, திருஞானசம்பந்தர் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை பொன்ராசா (13.01.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை பொன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற இரட்ணாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசதுரை (ஓய்வுநிலை அதிபர் யா/ நாரந்தனை கணேச வித்தியாலயம்) சகுந்தலையம்மா மற்றும் சரஸ்வதியம்மா, சுப்பிரமணியம் (தங்கராசா-கனடா), ஏகநாயகியம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், செல்லப்பாக்கியம், காலஞ்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை, பாலசுந்தரம் (ஓய்வுபெற்ற லிகிதர் - கச்சேரி) மற்றும் லோகேஸ்வரி (கனடா) காலஞ்சென்ற கோபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் கதிர்காமநாதன், காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் மனோரஞ்சிதன், தவத்தலைவி (சுவிஸ்) கலைச்செல்வி, திருச்செல்வி, சுகனியா (முன்னாள் பொறியியலாளர் தேசிய நீர் வழங்கல் வடிகால் சபை- யாழ்ப்பாணம் - UK) குருபரன் (முன்னாள் சாரதி - விவசாய திணைக்களம், யாழ்ப்பாணம்-கனடா), துஷ்யந்தி (முன்னாள் ஆசிரியர் மு/ மல்லாவி மத்திய கல்லூரி UK) காலஞ்சென்ற முகுந்தன் மற்றும் தர்சினி (முன்னாள் விவசாய போதனாசிரியர்-யாழ்ப்பாணம் கனடா) சந்திரவதனி (முன் னாள் உப தபாலதிபர்- எழுவைதீவு UK) பத்மினி (ஆசிரியர் யா/ வேலணை கிழக்கு, மகா வித்தியாலயம்) இளங்கோவன் (ஆசிரியர் யா/ வேலணை மத்திய கல்லூரி), கருணாகரன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம்- ஊர்காவற்றுறை) ஆகியோரின் மாமனாரும், சிவ குமரன் (கனடா) காலஞ்சென்ற திருக்குமரன் மற்றும் செல்வகுமரன் (பிரான்ஸ்) பூங்கோதை (கனடா), சிவசக்தி (கனடா) ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.01.2021) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**திருஞானசம்பந்தர் வீதி,**
**வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை,**
**(சங்கரத்தை சந்தி)**

**சரஸ்வதிஅம்மா (சகோதரி) 021 225 0945**
**தங்கராசா - கனடா +4165190597**
**இளங்கோவன்- 077 8737 338**

# பேச்சு சுதந்திரத்தைப் பாதுகாக்குமாறு ஜனாதிபதிக்கு எதிராகப் போராட்டம்

**கொழும்பு, ஜன. 14.**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வெளியிட்டிருந்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து 'பேச்சு சுதந்திரத்தை பாதுகாப்போம்' என்ற தொனிப்பொருளில் கொழும்பு சுதந்திரசதுக்க வளாகத்தில் எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**



அதில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்ததாவது:

இலங்கை சுதந்திரமான, ஜனநாயக நாடு. இங்கு ஜனநாயகம் நடைமுறையிலுள்ளதே தவிர சர்வாதிகாரமல்ல. பேச்சு சுதந்திரம் உள்ளிட்ட அனைத்து உரிமைகளும் மக்களுக்கு இருக்கின்றன. மக்களுக்கு உள்ள உரிமைகளுக்கு சமமான உரிமை மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இருக்கிறது. அதனை நாடாளுமன்றிலும் நாடாளுமன்றுக்கு வெளியிலும் உபயோகிக்க வேண்டும்.

அதனை உபயோகித்தே நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ நாட்டு மக்கள் சார்பில் நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். அதற்காக அவரது உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது. ஹரின் மீது ஏதேனும் மிலேச்சத்தனமான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுமாயின் அதனை எம் ஒவ்வொருவர் மீதும் தனிப்பட்ட ரீதியில் மேற்கொள்ளப்படும் தாக்குதலாகவே கருதுவோம்.

அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்த நாம் அவருடன் இருப்போம். ஏதேனுமொரு வகையில் அவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டால் அதற்கு ஜனாதிபதியும் அவர் தலைமையிலான அரசுமே பொறுப்புக் கூறு வேண்டும். ஆளுந்தரப்பில் சிலர் இதனை கேலிக்குள்ளாக்குகின்றனர். அவர்களது பாதுகாப்பு உறுதியாகவுள்ளதால் எதிர்த்தரப்பினர் பாதிக்கப்படுகின்றமையைக் கேலிக்குட்படுத்த வேண்டாம் என்று வலியுறுத்துகின்றோம்.

தற்போது சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்க தொடர்பில் கவலையடைகின்றோம். எனினும், இதற்கு முன்னரும் அவர் பல சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளார்.


அவற்றின்போது நானும் ஐக்கிய மக்கள் சக்தியினரும் அவருடன் இருந்ததைப் போலவே இனியும் அவருடனேயே இருப்போம். நீதிமன்றத்தின் தீர்ப்பை நாம் ஒருபோதும் சவாலுக்கு உட்படுத்த மாட்டோம். அரசமைப்புக்கமைய சட்ட ரீதியாகவும் அவரது நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பாதுகாப்பதற்கான முயற்சியைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம். ரஞ்சன் ராமநாயக்கவை நாம் ஒருபோதும் தனித்து விடப்போவதில்லை. என்றார். (த-இ)

# மரண அறிவித்தல்

## திரு.சின்னத்துரை குமரவேல் (JP)

**தோற்றம்**
**01.12.1945**

**மறைவு**
**13.01.2021**



(ஓய்வுபெற்ற நூலகர்-பொது நூலகம் சுன்னாகம், முன்னாள் தலைவர் பலநோக்கு கூட்டுறவு சங்கம் சுன்னாகம், விவாக பதிவாளர் வலிகாமம் வடக்கு, முன்னாள் பரிபாலன சபைத் தலைவர்-ஐயனார் தேவஸ் தானம் சுன்னாகம், முன்னாள் தலைவர் யாழ் மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம், முன்னாள் தலைவர் யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம், முன்னாள் தலைவர் யாழ் மாவட்ட கூட்டுறவு சபை, முன்னாள் தலைவர் வலிதெற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம், அறங்காவலர் முனியப்பர் கோவில் சுன்னாகம், முன்னாள் தலைவர் சுன்னாகம் நகர அபிவிருத்தி சங்கம்) நேற்று அதிகாலை (13.01.2021) இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை இராசமணியின் இளைய அருமை புதல்வனும், காலஞ்சென்ற செல்லத்துரை நாகம்மாவின் அருமை மருமகனும், காலஞ்சென்ற திலகவதி (முன்னாள் பொது முகாமையாளர் - பலநோக்கு கூட்டுறவு சங்கம்-சுன்னாகம்) அவர்களின் ஆருயிர் கணவரும், விதூஷனி (சிரேஷ்ட்ட தொழிநுட்ப உத்தியோகத்தர்- மருத்துவபீடம் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்), ஜெயப்பிரணவன் (உரிமையாளர் குமரன்'ஸ் குரூப்-சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேஷ்குமார் (பிரதம பொறியியலாளர் மாநகரசபை - யாழ்ப்பாணம்), பானுஷா ஆகியோரின் அருமை மாமனாரும், கேதுஷா, கேனிஷா (உடுவில் மகளீர் கல்லூரி - தரம் 5) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற வெற்றிவேலின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற கிருஷ்ணானந்தன் (இலங்கைநாயகம் - முன்னாள் இலங்கை பாராளுமன்ற மொழிபெயர்ப்பாளர்), காலஞ்சென்ற தர்மாவதி, மற்றும் திலகரத்தினம் (திலகர் - கனடா), புவனேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், இரத்தினபூபதி (கொழும்பு), காலஞ்சென்ற சிவஞானம் (சுசிதர்), மற்றும் ரஞ்சினிதேவி (கனடா) ஆகியோரின் சகலனும், சுகந்தி (கனடா), ஸ்ரீமதி (கனடா), துஷ்யந்தி(கனடா), ஸ்ரீகாந்த் (கனடா), சுசிந்தா (கனடா), இராவணன் (கனடா), வாசுகி, காலஞ்சென்ற நக்கீரன் ஆகியோரின் சிறிய தந்தையாரும், தயாபரன் (நோர்வே), கிருபாகரன் (கொழும்பு), சுஜாத்தா (கொழும்பு), சாருகா (கனடா),சண்முகப்பிரியா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.01.2021 புதன்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் ஈமைக்கிரியைகள் நடைபெற்று சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**"திருவேரகம்"**
**முத்துகிருஷ்ணர் வீதி.**
**சுன்னாகம்**

த
கு

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்



### முள்ளிவாய்க்கால்...

கான கட்டுமானப் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரின் உத்தரவுக்கு அமைவாக மாணவர்களின் பங்குபற்றலோடு யாழ் பல்கலைக் கழக நிர்வாகத்தின் பொறியியல் பகுதியினரால் கட்டுமானங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழக கட்டட பணியாளர்கள் மற்றும் மேற்பார்வை பிரிவினரால் நில அளவுத்திட்ட பிரமாணங்கள் போன்றன கணிக்கப்பட்டு அதே இடத்தில் மீண்டும் தூபியை அமைப்பதற்கான ஆரம்பகட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன. (ம)

### தேசியப்பட்டியல்

நியாயமானது. ஆகவே, தேசியப்பட்டியல் உறுப்பினராக ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்க வேண்டும்' இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையே நியமிக்க வேண்டும் எனக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக வலியுறுத்தப்பட்டது. கட்சியின் பதவி நிலைகளில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ள நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியபட்டியல் எம்.பிக்கான வெற்றிடம் இன்னமும் நிலவுகின்றது. எனவே, அந்தப் பதவிக்குக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட வேண்டும் என்ற ஏகமனதான கோரிக்கையை ஐக்கிய தேசியக் கட்சியினர் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் முன்வைத்துள் ளனர்.

மேலும், அவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இந்தப் பொறுப்பை அவர் ஏற்றே ஆகவேண்டும் எனவும் கட்சியின் உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர். எனினும், இதற்கு ரணில் விக்கிரமசிங்க எந்தவிதப் பதிலையும் மத்திய செயற்குழுவில் தெரிவிக்கவில்லை என்று கூறப்படுகின்றது. (ம-22)

### கொரோனா....

நேற்று முன்னிரவு வெளியான அறிக்கையில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 687 என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதையடுத்து கடந்த வருடம் ஜனவரியில் இருந்து நேற்று வரை கொரோனாவால் இலங்கையில் பாதி[illegible]ப்பட்டவர்களின் எண்ணிக்[illegible]து 244ஆக அதிகரித்[illegible] (ம)

## 22 கிலோ இரத்தினக் கல் சுரங்கத்தில் மீட்பு

கொழும்பு, ஜன.14

அவிசாவளை- தெஹியாகலவில் உள்ள ஒரு சுரங்கத்தில் 22 கிலோ எடையுள்ள அரிய படிக இரத்தினக் கல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என தேசிய மாணிக்கம் மற்றும் நகை ஆணையம் தெரிவித்துள்ளது. இந்த அரிய ரத்தினக் கல்லில் நீர்க் குமிழி இருப்பதால் இது அதிக பெறுமதியுடையது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## மொயின் அலி மூலம்

# புதிய வகை கொரோனா நாட்டுக்குள் ஊடுருவல்!



கொரோனா, ஜன. 14

அதிக வீரியம்கொண்ட புதிய வகை கொரோனா வைரஸ் இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் மொயின் அலி ஊடாகவே இலங்கைக்குள் ஊடுருவியுள்ளது என சுகாதார தரப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

இங்கிலாந்தில் வேகமாக பரவி வரும் அதிக வீரியம் கொண்ட புதிய வகை கொரோனா வைரஸ் இலங்கையில் உள்ள ஒருவருக்கு தொற்றியுள்ளது என சிறிஜயவர்தன புர பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுமூலம் கண்டறியப்பட்டது.

இங்கிலாந்திலிருந்து இலங்கைக்கு வந்த ஒருவருக்கே இவ்வாறு வைரஸ் தொற்றியுள்ளது என தெரியவந்ததையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், கிரிக்கெட் வீரர் மொயின் அலி ஊடாகவே புதிய வகை வைரஸ் நாட்டுக்குள் வந்துள்ளது என தெரியவந்துள்ளது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியினர் கடந்த 3ஆம் திகதி தனி விமானம்மூலம் மத்தள விமானநிலையம் ஊடாக நாட்டுக்குள் வந்தனர். அதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் சகலதுறை வீரர் மொயின் அலிக்கு வைரஸ் தொற்றியமை கண்டறியப்பட்டது.

அதேவேளை, ஆரம்பம் முதலே இறுக்கமான சுகாதார நடைமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டதால் குறித்த கிரிக்கெட் வீரரிடமிருந்து, வேறு நபர்களுக்கு வைரஸ் தொற்றியிருப்பதற்கான சாத்தியமில்லை என சுகாதார தரப்பு தெரிவித்துள்ளது. அத்துடன், மொயின் அலியின் தனிமைப்படுத்தல் கால எல்லையும் நீடிக்கப்பட்டுள்ளது. (ம-44)

**வேலைவாய்ப்பு**

யாழ். நகரத்தில் இயங்கும் ITநிறுவனம் ஒன்றிற்கு ICT, ஆங்கிலம் தெரிந்த வேலையாள்கள் தேவை.

074 152 9232

# 31ஆம் நாள் நினைவு நாளும் நன்றி நவிலலும்



அமரர்

**திருமதி பொன்மலர் சோதிநாதன் (கோகிலா) அவர்கள்**

மலர்வு 15.07.1952 — உதிர்வு 16.12.2020

கடந்த 16.12.2020 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 14.01.2021 வியாழக்கிழமையும், ஆத்மசாந்தி பிரார்த்தனை 15.01.2021 வெள்ளிக்கிழமையும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

துயரச்செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி, சமூகவலைத் தளங்கள் மூலமும் எமக்கு ஆறுதல் கூறியவர்களிற்கும், மலர்வளையங்கள், மலர்மாலை சாத்தியவர்களிற்கும், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அயலவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

( கொவிட் - 19 கொரோனா சூழ்நிலை , சுகாதார நடைமுறைகளை பின்பற்றி கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.)

37A, முருகன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.

இங்ஙனம்
குடும்பத்தினர்

## தமிழர்...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நாளிலேயே அவர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'புதிய அரசமைப்பு உருவாகி தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டால் அது நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மையளிக்கும். புதிய அரசமைப்பு நிறைவேறாவிட்டால் நாட்டில் அமைதி, சமாதானம், சுபீட்சம் எதுவும் ஏற்படாது. ஆனபடியால் ஆட்சியாளர்கள் புத்திசாலித்தனமாக நடக்க வேண்டும். இல்லையேல் இந்த நாடு சர்வதேச அரங்கில் பேராபத்தைச் சந்திக்கும்.

எமது மக்களைப் பொறுத்தவரை - எம்மைப் பொறுத்தவரை ஒரு நியாயமான சமத்துவமான அனைவரினதும் உரிமைகளையும் மதிக்கின்ற நாட்டுக்கு எவ்வித தீங்கும் ஏற்படாத, சகலரும் ஒற்றுமையாக வாழக்கூடிய, நீடித்து நிலைத்திருக்கக்கூடிய நிரந்தர தீர்வைப் பெற்றுத்தரக்கூடிய புதிய அரசமைப்பு உருவாகுவதற்கு நாம் பரிபூரண உதவி வழங்குவோம்.

நிரந்தர அரசியல் தீர்வின் ஊடாகவே நாட்டு மக்களின் எதிர்காலம் வளமடையும் என்பதை ஆட்சியாளர்களிடம் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அந்தத் தீர்வானது இலங்கை வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமையும். இதய சுத்தியுடனான இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும்.

இலங்கைத் திருநாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி புலம்பெயர்ந்து வாழும் எம்மக்களுக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வெய்துகின்றேன். தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்குத் தீர்வு கிடைக்க இன்றைய நாளில் பிரார்த்தனை செய்வோம்' என்றார். (ம-22)

## ரஞ்சனுக்கு...

வழக்கில் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 4 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது. அவருக்குப் பதிலாக நாடாளுமன்ற உறுப்பினராகும் வாய்ப்பு விருப்பு வாக்கு பட்டியலில் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு அடுத்த இடத்தில் உள்ள அஜித் மானப்பெருமவுக்குக் கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஞ்சன் ராமநாயக்க, நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு காரணமாக சிறைத் தண்டனை பெற்று அவரது நாடாளுமன்ற உறுப்புரிமையை இழக்க நேரிடுவதால், அஜித் மானப்பெரும பதில் நபராகப் பதவியேற்பார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அஜித் மானப்பெருமவை பதிலீடு செய்ய தமது கட்சி எந்த கோரிக்கைகளையும் முன்வைக்கவில்லை எனவும், 1981ஆம் ஆண்டின் முதலாம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பிரகாரம் தானியக்க முறையில், அது குறித்த செயற்பாடுகள் இடம்பெறும் எனவும் ரஞ்சித் மத்தும பண்டார கூறினார்.

2020 ஓகஸ்ட் பொதுத் தேர்தலின் போது கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட அஜித் மான்னப்பெரும 47 ஆயிரத்து 212 வாக்குகளைப் பெற்றுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் பட்டியலில் அவரே அடுத்த இடத்தில் உள்ள நிலையில், தெரிவுசெய்யப்பட்ட ஒரு வேட்பாளர் பதவியை இழக்கும்போது தேர்தல்கள் ஆணைக்குழு அடுத்த சில நாள்களில் பட்டியலில் அடுத்த இடத்தில் இருப்பவரை பெயரிட்டு வர்த்தமானி வெளியிடுவது வழமையாகும். (எ-இ)

## உலகத் தமிழ்ச்...

உலகத் தமிழ்ச் சங்கத்தின் இலக்கணத்துக்கான விருது வழங்கப்படவுள்ளது.

தமிழ்நாடு அரசால் மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் இலக்கியம், இலக்கணம் மற்றும் மொழியியல் துறைகளில் சிறந்து விளங்கும் அயலகத் தமிழறிஞர்கள் மூவருக்கு ஆண்டுதோறும் உலகத் தமிழ்ச்சங்க விருதுகள் வழங்கப்படுகின்றன. அதன் அடிப்படையில் 2020ஆம் ஆண்டுக்கான உலகத் தமிழ்ச் சங்க இலக்கண விருது யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் பெருந்தலைவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியருமாகிய பேராசிரியர் அ.சண்முகதாஸுக்கு வழங்கப்படவிருக்கிறது.

இவ்விருது வழங்கும் விழா விரைவில் நடைபெறவுள்ளது என்றும் தமிழக முதலமைச்சர் விருதைக் கையளிக்கவுள்ளார் என்றும் உலகத் தமிழ்ச்சங்கத்தின் இயக்குநர் முனைவர் தா.லலிதா அறிவித்துள்ளார். (ம)

## அரசியல்கைதிகளை...




குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் மத்திய பேருந்து நிலையம் முன்பாக நேற்றுக் காலை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என்றும் தெற்கில் உள்ளவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்குவது போன்று சிறைக் கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என்றும் அரசாங்கத்திடம் அரசியல் கைதிகளின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

மேலும் தியாக தீபம் திலீபன் நினைவேந்தல், யாழ் பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிப்பு விவகாரம் ஆகிய இரண்டு விடயங்களிலும் தமிழ்த் தேசிய கட்சிகளும் தமிழ்த் தேசிய உணர்வாளர்களும் ஒன்று சேர்ந்து செயற்பட்டது போன்று அரசியல் கைதிகளின் விடயத்திலும் அனைவரும் ஒருமித்து செயற்பட்டு அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ம-7,20)

## அரசியல்..

யத்தில் நேற்று நடைபெற்ற கவனயீர்ப்பில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரும் கலந்து கொண்டார். வெலிஓயாவில் இருந்து வந்திருந்த இவர், நீண்டகாலமாகச் சிறையில் வாடும் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். (ம-எஇ)

## யாழ். மாநகர...

வேற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான முதலாவது அமர்வு நேற்று யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்த அமர்வில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைந்திருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி கடந்த 8ஆம் திகதி இடித்து அழிக்கப்பட்டமையைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், சபை அமர்வு ஐந்து நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டது.

பல்கலைக்கழக வளாகத்தில் இராணுவம் மற்றும் பொலிஸார் உள்நுழைந்தமையைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், மாநகர சபை எல்லைக்குள் புதிதாக முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை அமைக்கவும் தீர்மானம் எட்டப்பட்டது. (ம-எ,26)

## தனிச் சிங்கள...

சாரதி அனுமதிப் பத்திரத்தையும் அவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

மாங்குளம் நீதிமன்றமே இந்தத் தீர்ப்பை வழங்கியது. போக்குவரத்துக் குற்றத்துக்கான தண்டப்பத்திரத்தை குறித்த நபருக்குத் தனிச் சிங்களத்தில் பொலிஸார் வழங்கியிருந்தனர். இந்த வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது தனது தாய்மொழியான தமிழில் தண்டப்பத்திரம் வழங்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டவர் தெரிவித்திருந்தார். சிங்களத்தில் தண்டப்பத்திரம் வழங்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து அவரது சாரதி அனுமதிப்பத்திரத்தை மீளவும் கையளிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம)

## பரராஜசிங்கம்...

உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) உட்பட ஐந்து பேரும் விடுவிக்கப்பட்டனர். வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற விசேட நீதிபதி டி.சூசைதாசன் முன்னிலையில் நேற்றுப் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் 2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25ஆம் திகதி மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் படுகொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட ஐந்து பேர் சந்தேகத்தின் அடிப்படையில் 2015ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

2015ஆம் ஆண்டு தாம் கைதுசெய்யப்பட்ட பின்னர் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் தங்களால் சுயமாக வழங்கப்படவில்லை என வழக்கின் முதலாம், இரண்டாம் எதிரிகள் தெரிவித்திருந்தனர். அச்சுறுத்தல் காரணமாகவே அந்த வாக்குமூலத்தை தாம் வழங்கியிருந்தனர் எனவும் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் த நேரடியாக நீதிமன்றில் முற்ப டுத்தப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டிருந்தது என்றும் தெரிவித்து மேன்முறையீட்டு நீதிமன்றில் மீளாய்வுக்கு விண்ணப் பித்திருந்தனர்.

இந்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்தன் அடிப்படையில் 24ஆம் திகதி மட்டக்களப்பு மேல்நீதிமன்றத்தில் சட்டமா அதிபரின் ஒப்புதலின் பேரில் பிணை வழங்கப்பட்டிருந்தது. கடந்த திங்கட்கிழமை சட்டமா அதிபர் திணைக்களம் இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்தமுடியாது என மட்டக்களப்பு மேல் நீதிமன்றுக்கு அறிவித்திருந்த நிலையில், வழக்கின் குற்றச்சாட்டுகளில் இருந்து அவர்களை விடுவித்து வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது. (ம-எஇ)

## வவுனியா...

டுள்ளனர். அதையடுத்து வவுனியா நகரக் கொத்தணியால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 146ஆக உயர்ந்துள்ளது.

வவுனியா, பட்டாணிச்சூரில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து வவுனியா வியாபார நிலையங்களில் பணியாற்றுபவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவற்றில் ஒரு தொகுதி முடிவுகள் நேற்றுக் காலை வெளியான நிலையில், வவுனியா மில் வீதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் 16 பேருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் வவுனியா மருத்துவமனை ஊழியர்கள் இருவருக்கும் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-எ,110)

## அனைத்து...

லாவிடில் லீவாகக் கருதப்படும் என்று வவுனியா மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. வவுனியா மாவட்டச் செயலருக்கும் இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

வவுனியாவில் நகரப் பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன. கிராமப் புறங்களில் இருக்கும் பெருமளவான பாடசாலைகளுக்கும் நகரப் பகுதிகளில் இருந்தே ஆசிரியர்கள் செல்கின்றனர். மாவட்டச் செயலரின் இந்த உத்தரவு வவுனியா மாவட்டம் முழுவதும் கொரோனா பரவுவதற்கு ஏதுநிலைகளை ஏற்படுத்திவிடும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை முடக்கப்பட்ட பகுதிகளில் உள்ள அரச அலுவலர்கள் வீட்டில் இருந்து பணிபுரியலாம் என அரசு அறிவித்திருந்தது.. ஆயினும் அதற்கு மாறாக வவுனியா மாவட்ட அரச அதிபர் சகல அரச ஊழியர்களையும் பணிக்கு சமுகமளிக்க உத்தரவிட்டிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-110)

# இலங்கை - இங்கிலாந்து டெஸ்ட் இன்று ஆரம்பம்!






காலி, ஜன. 14

இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் காலியில் இன்று ஆரம்பமாகின்றது.

இரு ஆட்டங்களையும் காலி மைதானத்தில் நடத்தவே திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி முதலாவது ஆட்டம் இன்று முதல் எதிர்வரும் 18ஆம் திகதி வரையும் இரண்டாவது ஆட்டம் 22ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரையிலும் நடைபெறும். கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக ரசிகர்கள் இல்லாமல் இந்த ஆட்டம் நடைபெறுகின்றது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் இலங்கை அணியின் வீரர்கள் பலர் காயமடைந்திருந்த நிலையில் அவர்கள் தற்போது காயத்தில் இருந்து மீண்டுள்ளனர். குறிப்பாக மத்தியூஸ் காயத்தில் இருந்து மீண்டு இன்று 'ஸ்பெஷலிஸ்ட் பேட்ஸ்மன்' என்ற குறியீடுடன் களமிறங்குவார். அதுபோன்று சந்திமலும் காயத்தில் இருந்து குணம் பெற்றுள்ளார்.

இங்கிலாந்து அணியைப் பொறுத்தவரையில் சகலதுறை வீரர் மொயின் அலி கொரோனாவால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை பின்னடைவு என்று கருதப்படுகின்றது. ஜக் லீச், ரொம் பெஸ் சுழற்பந்துவீச்சுக் கூட்டணி இங்கிலாந்து அணியின் சார்பில் களமிறக்கப்படலாம். அணித்தலைவர் ரூட் காயத்தில் இருந்து மீண்டுள்ளார். அதேநேரம் வேகப்பந்துவீச்சாளர் சாம் கரன் மீதும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. (ம)

**காணி தேவை**

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், மானிப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசத்திற்குள் 10 தொடக்கம் 30 வரையான பரப்பளவு காணி தேவை. தரகர் தேவையில்லை.

தொடர்புகொள்ளவும்: 076 2212 037

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் ராசபாதை சந்தியில் இருந்து 500 m தூரம். மெயின் றோட்டுடன் 03 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.

குரு:- 077 805 1655
077 288 0152
077 505 8561

**தேவை**

வெல்டிங் (மின் ஒட்டுனர்) வேலை அனுபவம் உள்ளவர்கள் தேவை.
(யாழ்ப்பாணம் அருகில்).
தொடர்பு: 076 660 1600

**காடை விற்பனைக்கு**

தரமான காடைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு: 077 477 5603

## மரண அறிவித்தல்



### விக்கினேஸ்வரி ஜெகதீஸ்வரன்

**(இளைப்பாறிய ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி)**
**B.Sc (Hons) Chemistry.**

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்பொழுது பலாலி வீதி கொக்குவில் கிழக்கு கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட விக்கினேஸ்வரி ஜெகதீஸ்வரன் நேற்று (13.01.2021) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சின்னம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வியும், காலஞ்சென்ற ஏரம்பு தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற ஏரம்பு ஜெகதீஸ்வரனின் அன்பு மனைவியும், கோகிலா (B.Sc Chemical Engineering London), வரதன் (B.Sc (Hon) Sur.Eng London), உத்தமன் (பிராந்திய முகாமையாளர் Abans) ஆகியோரின் அன்புத் தாயாரும், கலாவண்ணன் (London), லக்ஷசுமினி (London), கோகிலப்பிரியா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற மதுரநாயகி கனகரத்தினம், காலஞ்சென்ற கந்தையா நடேசலிங்கம், Dr.யோகேஸ்வரி கதிரவேற்பிள்ளை, நாகேஸ்வரி பரமேஸ்வரநாதன், காலஞ்சென்ற செல்வி ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தியாகராசா, திரு.சண்முகானந்தராசா (பிரான்ஸ்), திரு.கணேசானந்தராசா (ஓய்வு பெற்ற செயலாளர், பிரதேச சபை ஊர்காவற்துறை), காலஞ்சென்ற முருகானந்தராசா ஆகியோரின் மைத்துனியும்,கோபி, தருணி, ராகவி, பிரகாஸ், கருணியா, சிவானியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.01.2021) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் பலாலி றோட், கோண்டாவில் (அம்மாச்சி உணவகம் முன்பாக) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நன் ஜெ.உத்தமன் 0773179593
ர் ஜெ.வரதன் 00447950152514
க.கோகிலா 00447983514270

பலாலி றோட் கோண்டாவில்.
(அம்மாச்சி உணவகம் முன்பாக)

# பிரிஸ்பெய்ன் டெஸ்ட்; இந்தியா சாதிக்கும்!

கான்பெரா, ஜன. 14

ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பெய்ன் மைதானத்தில் இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான நான்காவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டம் நாளை ஆரம்பமாகின்றது. இந்த ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெறும் என்று நம்பிக்கை தெரிவித்தார் கவாஸ்கர். தற்போது தொடர் 1:1 என்றுள்ளது. பிரிஸ்பெய்ன் மைதானத்தில் ஆஸ்திரேலியா வீழ்த்த முடியாத அணியாக இருக்கலாம். ஆனால் ரகானே தலைமையிலான அணி ஆஸியை வீழ்த்தப் போராடும். நிச்சயம் பெரும் நெருக்கடி கொடுத்துச் சாதிக்கும் என்று கவாஸ்கர் மேலும் தெரிவித்தார். (ம)

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf )
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

**உயர்வகை பல் வைத்திய சேவைக்கு... For Quality, Professional Dental Care**



INTERNATIONAL DENTAL CARE

INTERNATIONAL DENTAL CARE HOSPITALS (PVT) LTD.

Jaffna Branch:
No:84, Stanly Road, (Near Ariyakulam Junction) Jaffna. Srilanka.
Tel: 021 222 0833, 021 492 3353, 077 003 1547

Colombo Branch:
No:79/9, W.A.Silva Mw, Wellawatta,Colombo-06, Srilanka.
Tel: 011 250 7070, 011 438 0803, 077 013 9372

Vavuniya Branch: Raaj Medical Lab,
No:10, Bazaar Street, Vavuniya, Srilanka.
Tel: 024 222 1577, 024 492 5527, 077 013 9374

Web: www.internationaldentalsrilanka.com Email: internationaldentalcare@gmail.com



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.